அதிகாரம் 4

# ஆதாம் மற்றும் ஏவாளின் இல்லறம்

ஆதியாகமம் 2:7-3:24 வரையுள்ள வசனங்கள் ஆதாம் மற்றும் ஏவாளுடைய ஏதேன் தோட்டத்தின் உள்ளே நடந்த வாழ்வின் நிகழ்வுகளைப் பற்றி குறிப்பிடுகிறது. அவர்கள் தேவனுடைய சட்டத்தின்படி அவருடைய உலகத்தில் வாழ்வதற்கு தோல்வியடைந்த படியினால் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டனர், ஆக உலகத்திலிருந்த பரதீசுவிற்கு வெளியே வந்த முதல் தம்பதியரின் அனுபவங்களை 4:1-24 ஆகிய வசனங்கள் குறிப்பிடுகின்றது. ஏவாள் காயீன் மற்றும் ஆபேல் என இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தார். அவர்களுடைய வாழ்வின் மூலம் பாவத்தின் கனியையும் மற்றும் அதன் அழிவுக்கேதுவான பிரதிபலன்களையும் ஆதாம் மற்றும் ஏவாளின் இல்லத்தில் நாம் மீண்டும் இங்கு பார்க்க முடிகிறது. இளைய புதல்வர், அவனுடைய மூத்த புதல்வரால் கொல்லப்பட்டார்.

காயீனின் வழி மரபில் வந்த ஒருவர் தாம் ஒருவரை கொன்றதனைப் பற்றி மேன்மையாக கூறுவது வரை, ஆதியாகமத்தின் ஆக்கியோன் சமூகத்தில் பாவம் எப்படி பெருகியதென்பதனை மேலும் விவரிக்கிறார். இறுதியாக, அதிகாரத்தின் முடிவில் (4:25, 26) ஒரு நம்பிக்கையின் கதிர் வசனத்தில் காணப்படுகிறது, ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோர் மேலும் ஒரு புதல்வனை பெற்றெடுத்தனர் மற்றும் அவள் மூலம் மக்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளத்துவங்கினர்.

## ஏதேன் தோட்டத்திற்கு வெளியே (4:1-16)

### காயீன் மற்றும் ஆபேலின் பிறப்புகள் (4:1, 2)

**1ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். 2பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்.**

**வசனம் 1.** இந்த அதிகாரம் ஆதாம் தனது மனைவியாகிய ஏவாளோடு உறவுகொண்டார் எனும் கருத்துடன் தொடங்குகிறது, மேலும் இவ்வரிகள் ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை "அறிந்தார்" (יָדַע, *yada'*) என வெளிப்படையாக எடுத்துரைக்கிறது. இந்த எபிரெய பதமானது ஆதியாகமமெங்கிலும் பாலுறவுகளை மென்மையாக எடுத்துரைக்க பயன்படுத்தப் பட்டிருக்கிறது (4:1, 17, 25; 19:8; 24:16; 38:26). இது அவர் ஏவாளை மிகவும் நெருக்கமாக அறிந்து கொண்டாரென்பதனை பொருள் படுத்துகிறது.

**அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்றாள்** (קַיִן, *Qayin*) என பெயரிட்டார். காயீன் என்பதற்கு "தெளிவற்ற" என்பது மூல பதமாகும். இதனை ஒருவேளை அறிவோடு தொடர்புடைய קין), *qyn*) கின் எனும் பதத்துடன் இணைத்துவிடக்கூடாது. மாறாக 4:1ல் இதே ஒலிப்புடன் வேறொரு வேர் சொல்லுடன் இணைந்திருக்கிற (קָנָה, *qanah*) கியுனா எனும் எபிரெய பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "உண்டாக்கின" அல்லது "ஆட்கொண்ட" என்பது பொருளாகும், எனவே இதனை இச்சொல்லுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.[1]

காயீன் பிறப்பை குறித்து ஏவாளின் மறுமொழி NASB மொழிபெயர்ப்பு வேதத்தில் "**நான் கர்த்தருடைய உதவியால் ஒரு ஆண் குமாரனைப் பெற்றேன்**" என குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆண் குமாரன்" என மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய மொழி (אִישׁ, *'ish*), எபிரெய பதம், பொதுவாக மனிதன் என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிற பதமாகும் (காண்க KJV; NRSV; NIV; ESV). "குமாரன்" அல்லது "மகன்" என்னும் பதத்திற்குப் பதிலாக மனிதன் என்னும் பதத்தை ஏவாள் பயன்படுத்தியது ஏன்? ஒருவேளை "மனிதனிலிருந்து" எடுக்கப்பட்டு பின்பு மனுஷன் பதம் (אִישׁ, *'ish*) என்றழைக்கப்பட்ட நான், தற்போது மனுஷியாக (אִשָּׁה, *'ishshah*; 2:23) எனும் சொல் விளையாட்டினை ஏவாள் பயன்படுத்தியிருக்கக் கூடும். இப்போது, அவள், ஒரு மனுஷியாக (*'ishshah*) இருந்து கொண்டு ஒரு மனிதனைப் (*'ish*) பெற்றெடுத்தாள்.[2] இந்த ஒருவரோடொருவர் கொண்டுள்ள சார்பு தன்மையினை விளக்கும் விதமாக பவுல் "ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்" (1 கொரி. 11:12; NIV) குறிப்பிடுகிறார்.

இவ்வசனத்தின் கடினமான பகுதியாகிய (אֶת, *'eth*) எனும் பதம் பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "கர்த்தரால்" "ஆல்" ஆங்கிலத்தில் "றஇவா" எனும் முன்னிடைச்சொல்லுடன் கூறப்பட்டுள்ளது. NASB வேதத்தில் "கர்த்தரால்" எனும் பதத்துடன் "உதவியுடன்" எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இப்பதம் எபிரெய எழுத்துக்களில் இல்லை. மிக தொன்மையான அராமிய சட்ட நூலான ஒங்கலோஸ் ட்டர்கும் "கர்த்தரின் முன்னிருந்து"[3] என புதிதாக பிறந்த குழந்தையினை கர்த்தரிடமிருந்துப் பெற்ற பரிசாக கூறுகிறது.

செப்துவஜிந்த் இக்கருத்துப் புரிதலுடன் ஒத்துப் போகிறது. இதில் (διά τοῦ θεοῦ, *dia tou Theou*) "தேவனிடமிருந்து" என கூறப்பட்டுள்ளது. இது தேவனுடைய வழியாக எனும் பொருளினை தருகிறது.

ஒங்கலோஸ் ட்டர்கும் தெரிவிக்கின்ற கருத்து (מֵאֵת, *me'eth*) எனும் எபிரெய எழுத்துக்களைவிட சற்று மாறுபட்டு இருக்கிறது. (אֵת, *'eth*) படிப்பதன் அடிப்படை பிரச்சனை யாதெனில் "ஆல்" எனும் முன்னிடைச் சொல்லில் உயிரெழுத்து படிக்கப்படுதில்லை, கர்த்தரிட மிருந்து என்பதும் (-מֵ, *me*) எபிரெய எழுத்துக்களிலும் இல்லை. மாறாக உயிரெழுத்து நேரடியாக பொருளினை குறிக்கிறது அல்லது ஒரு வார்த்தை அதற்கு முந்தின பெயரெழுத்தினை குறிக்கிறது (אֵת, *'eth*) ஆக இச்சொற்றொடர் "நான் ஒரு மனிதனை பெற்றேன்: கர்த்தர்" என எழுத்துப் பூர்வமாக கூறுகிறது. இப்படி இலக்கண பிரச்சனை காரணமாக இச்சொற்றொடர் சில மறையறிஞர்களால் ஏவாள் வாக்குப்பண்ணப்பட்ட "கர்த்தராகிய" மீட்பரை பெற்றேன், காயீனுடைய பிறப்பினால் என் தண்டனையிலிருந்து உடனடியாக விடுவிக்கப்படுவேன் என கருதியதாக கூறுகின்றனர்.[4]

நான் ஒரு மனிதனைப் பெற்றேன் அவர் தேவ தூதனானவர் என பாலஸ்தீன ட்டர்கம் இதற்கு ஒத்தாற் போன்ற கருத்தினையே கூறுகிறது.[5] தேவ தூதனானவர் எனும் சொல் பழைய ஏற்பாட்டில் ஏறக்குறைய யெகோவாவிற்கு கூறப்படுகின்ற, குறிப்பிடப் படுகின்ற ஒரே பொருளுடைய பதமாகும் (16:7-13; 21:17-20; 22:11-18; 31:11-13; 48:15, 16).

கி.பி. 800 ஆம் ஆண்டில் வேதத்தை மொழி பெயர்த்தவர்கள்; எபிரெய மெய்யெழுத்துகளில் நேரடியான பெயர் சொல்களில் (אֵת, *'eth*); முன்னிடைய சொல்லான "ஆல்" (אֵת, *'eth*) உயிரெழுத்தினை கொண்டு வருகையில் மிகச்சரியாக பொருத்தினார்களா என்பது தெளிவில்லை. மேலும் காயீனுடைய பிறப்பில் ஏவாள் அடைந்த மகிழ்ச்சியின் உணர்வினை மிக துல்லியமாக மதிப்பாய்வு செய்துவிடவும் முடியாது, எப்படியாயினும்; காயீனுடைய பிறப்பில் "கர்த்தர்" ஈடுபட்டிருந்தார் என்பதனை ஏவாள் உறுதியாக நம்பினார் (காண்க 29:31; 30:22; 33:5; 48:9; யோபு 31:15; சங். 127:3; 139:13; எரே. 1:5). ஏவாளுடைய பார்வையில் புதிதாக பிறந்த குழந்தை "கர்த்தர்" ஆகவோ அல்லது பல ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் எபிரெய பதத்தை குறிப்பிடுவது போன்று கர்த்தராலேயோ அல்லது கர்த்தருடைய உதவியினாலோ கிடைக்கப்பட்டது. எப்படியாயினும் ஏவாளின் முதற்பிறப்பின் மகிழ்வும் கனவும் கேள்விக்குரியதாகி, அந்த ஆண் மகனை குறித்த அவரின் நம்பிக்கை ஒன்றுமற்றுப் போனது. அவரது பாடுகளை எளிதாக்குவதற்கு பதிலாக ஐயத்திற்கு இடமற்று வாழ்நாள் முழுவதும் இதயத்தில் வலியினை ஏற்படுத்துகின்ற ஆறாத்தழும்பினை இக்குழந்தை ஏற்படுத்தினது.

**வசனம் 2.** சில நாள் சென்ற பின்னர் ஏவாள் **காயீனுடைய உடன்பிறப்பான ஆபேலை பெற்றார்.** இரண்டாம் குழந்தையின் பிறப்பு இயல்பாக சொல்லப்பட்டிருப்பதனை காண்கையில், ஒருவேளை காயீனை விட ஏவாள் ஆபேலின் மேல் கொண்டிருந்த நம்பிக்கை மிகக் குறைவானதாகவே இருந்திருக்கும் என எண்ணத்தோன்றுகிறது. அவரது முதற்பிறப்பைக் குறித்த மேன்மையான அறிக்கையும், இரண்டாம் மகனை குறித்து எதனையும் குறிப்பிடாததும் அக்குழந்தையினை குறித்து சற்று ஏமாற்றம் அடைந்திருந்திருக்கிறார் எனும் உண்மையினை வெளிப் படுத்துகிறது. அக்குழந்தை ஒருவேளை காயீனைப் போன்று அழகான தாகவோ அல்லது பலமுள்ளதாகவோ இருந்திராமல் இருக்கலாம், அது சமயம் ஏவாளின் சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்ததனை நாம் அறியோம், ஆனால் அவர் பெயர் அவரது வாழ்வினை குறித்து துப்புக் கொடுக்கும் அச்சுறுத்தும் முன்னோடியாக இருந்தது.

ஆபேல் (הֶבֶל, *Hebel*) என்பது ஒருவேளை “ஆவி,” “சுவாசம்” அல்லது “மாயை” என பொருள்படும். பழைய ஏற்பாட்டில் இப்பதம் பொய்யான கடவுள்களை குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது; அவைகள் “சிலைகள்” எனவும் “மாயைகள்” எனவும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது சில நேரங்களில் தனது வாழ்கையையும் “பலத்தையும் ஒன்றுமற்ற மாயைக்கு” செலவிட்ட மனிதனை குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது (ஏசாயா 49:4). அனைத்தையும் பெற்றறிந்து அனுபவித்தும் வாழ்வில் திருப்தியடையாத ஒருவருடன் தொடர்புப்படுத்தி பிரசங்கி நூலில் 36 முறை மாயை எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[6] திருப்தியடையாதவராக பிரசங்கி தொடர்ந்து “எல்லாமே மாயை” அல்லது “பயனற்றது” மற்றும் “காற்றின் பின் ஓடுகிற” என்று தொடர்ந்து சொல்கிறார் (பிர. 2:11, 17 காண்க). எப்படியாயினும் ஆபேலின் வாழ்க்கையில் அவரது பெயர் - அவரது உடன்பிறப்பு காயீனால் குறைக்கப்பட்ட அவரது வாழ்க்கையின் சுருக்கத்தினை முன்னறிவிக்கிறது. ஆபேலின் உலக வாழ்வு “ஆதாரமற்ற பொருள்” அல்லது “காற்றை” போன்று தற்காலிகமானதாக இருந்தது.[7]

**ஆபேல் மந்தை மேய்ப்பவராக** விவரிக்கப்படுகிறார்,[8] ஆனால் காயீனோ **நிலத்தினை பண்படுத்துகிறவாராக** கூறப்படுகிறார்.[9] இதனை சிலர் இரண்டு விதமான வாழ்வுமுறையினால் ஏற்பட்ட பழங்கால இரு நாகரீகத்தின் போராட்டமாக கூறுவதுண்டு: ஒன்று வேளாண்மை மற்றும் நிலையாக சீரமைந்தது. மற்றொன்று மேய்ப்பது மற்றும் நாடோடி வாழ்வு. தேவனோ அல்லது மனிதனோ இவ்விரண்டு வாழ்வுமுறையையும் ஆதரித்ததாக எந்த தொகுப்பும் அளிக்கப்படவில்லை. காயீன் மற்றும் ஆபேலாகிய இருவருக்கும் ஏற்பட்ட முக்கியமான வேற்றுமை அவர்கள் சார்ந்த தொழிலில்

ஏற்படவில்லை மாறாக அவர்களின் இதயத்தின் தன்மைகளில் இருந்தது.

## காயீன், ஆபேலின் காணிக்கையும் அதற்குத் தேவனின் மறுமொழியும் (4:3-7)

**3சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். 4ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமை யானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். 5காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. 6அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? 7நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில்படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.**

**வசனங்கள் 3-5. காலங்கள்** கடக்கையில் காயீனும் ஆபேலும் தாங்கள் தெரிவுச் செய்த தொழில்களில் வளமடைந்தனர். நாம் காணும் மேற்கூறிய வசனங்கள் உடன்பிறப்புகள் இருவரையும் வழிபாட்டில் ஈடு பட்டிருப்பதனை சித்திரித்து கூறுகிறது. இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின்; காரணத்தினை சில அறிஞர்கள் விவரிக்கையில் அவர்கள் எவ்விதம் தேவனுக்கு தங்கள் காணிக்கையினை அளித்தனர் என்பதில் தான் ஏற்பட்டதென குறிப்பிடுகின்றனர்: **காயீன் நிலத்தின் கனிகளை கொண்டு வந்தார்** (பயிறு வகைகள் அல்லது காய்கறி காணிக்கை), **ஆபேல் மந்தையின் கொழுமையான தலையீற்றுகளை கொண்டு வந்தார்**. தேவனுக்கு ஏற்ற காணிக்கை எது என்பதனை குறித்து எந்த வசனமும் எதனையும் தெளிவுபட கூறவில்லை, எனினும் இருவரும் தங்கள் காணிக்கையினை (מִנְחָה, *minchah*) கர்த்தருக்குக் கொண்டு வந்தனரென வசனம் கூறுகிறது. யூத வரலாற்றில் மாவு அல்லது பயறு வகைகளின் காணிக்கையினை செலுத்தும் முறையினைக் குறிக்க இந்த பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது (லேவி. 2:1-3, 14-16),[10] ஆனால் இதில் விலங்கினங்களை பலியிடுதலும் அடங்கியுள்ளது (1 சாமு. 2:17).

**கர்த்தர் ஆபேலையும் அவர் காணிக்கையையும் ஏற்று கொண்டார் ஆனால் காயீனையும் அவர் காணிக்கையையும் அவர் ஏற்கவில்லை.** இங்கே தேவன் காயீனின் காணிக்கையை விட ஆபேலின் காணிக்கையினை மேன்மையாக கருதினதைக் குறித்த புரிதலின்

திறவுகோல் யாதெனில் “மந்தையின் தலையீற்றும் அவைகளின் கொழுமையானதுமாகும்” மோசேயின் சட்டத்தின் அடிப்படையில் விளைச்சலின் முதற்பலன் (யாத். 23:16-19; 34:22-26; லேவி. 2:14), விலங்கினங்களின் முதற்பிறப்பு (யாத். 13:11-13; 22:29, 30; 34:19, 20) மற்றும் அவைகளின் கொழுப்பு பகுதிகள் (யாத். 29:13; லேவி. 3:3-5; 4:8-10; 7:23-25) ஆகியவை சிறப்பான விதத்தில் கர்த்தருக்குரியவையாகும். வரலாற்றின் தொடக்க காலக்கட்டத்தில் தேவன் மனித இனத்திற்கு இவ்விதமான கட்டளைகளை கொடுத்தாரா? இல்லையா? எனும் வினவிற்கான விடை தீர்மானிக்க இயலாதவையாகும். எப்படியாயினும், ஆபேல் தனது மந்தையின் மேலிருந்த தேவனுடைய பேறுகளை மெச்சிக் கொண்டது மட்டுல்லாமல் தன்னிடம் இருந்தவைகளில் சிறந்தவைகளை அளித்து தனது நன்றியுணர்வை கர்த்தருக்கு வெளிப்படுத்தினார். காயீன் விருப்பமற்ற உணர்வோடு, முதற்பலனை தனக்கென வைத்துக் கொண்டு, மீந்தவைகளை தேவனுக்கு கொண்டு வந்திருக்கக்கூடும்.

ஆதியாகமத்தில் தேவன் ஆபேலின் காணிக்கையினை ஏற்றுக் கொண்டு காயீனின் காணிக்கையினை ஏன் புறக்கணித் தாரென்பதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. வசனத்தில் சில குறிப்புகள் மட்டுமே கூறப்பட்டுள்ளது; எப்படியாயினும், அவர்கள் தேவனோடு கொண்டுள்ள உறவும் பண்புகளும் அவர்கள் கொண்டு வந்த காணிக்கையும் வெவ்வேறானது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. எபிரெய மடலின் ஆக்கியோன் “விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்” (எபி. 11:4) என கூறுகையில் இதற்கு வலியுறுத்தம் தருகிறார்.

தேவன் “ஆபேலையும் அவர் காணிக்கையையும்” ஏற்றுக் கொண்டார், “காயீனையும் அவர் காணிக்கையையும்” ஏன் புறக்கணித்தாரென கூறும் சொற்றொடரில் பல உண்மைகளை நாம் அறிந்துணர இயலும். (1) இருவரும் தேவன் மேல் விசுவாசம் கொண்டு அவரை தொழுது கொண்டாலும், காயீனிடம் காணப்படாத அர்ப்பணிக்கப்பட்ட தரமான விசுவாசம் ஆபேலிடம் காணப்பட்டது. (2) இரு உடன்பிறப்புகளும் கர்த்தருக்கு காணிக்கையினைக் கொண்டு வந்தாலும், தனது முதற்பலனை தேவனுக்கு அளித்து அவரை மதித்த ஆபேலின் விசுவாசம், முதற்பலனையும் சிறந்தவைகளையும் தனக்கென வைத்துக் கொண்ட காயீனை விட பெரிதும் மாறுபட்டிருந்தது. ஒருவேளை காயீன் தன்னை தானே உயர்த்திக்கொண்டதாக எடுத்துக்கொண்டால், அவர் தேவனை உண்மையாக மதிக்கவில்லை

என பொருள் கொள்ளச் செய்கிறது. தேவன் மனிதர்களைப் போன்று புற செயல்களை மட்டுமே வைத்து கவனிக்காமல் இதயத்தின் பண்புகளை வைத்து அவர்களது வழிபாட்டின் நோக்கத்தை கண்டறிகிறார். இதன் பின்னர் கூறப்பட்ட வசனங்களில் கர்த்தரை தொழுகிறவர்கள் அவரை முழுமையாய் அன்புகூர, கீழ்ப்படிதலையும் இதயத்தில் நேர்மையையும் கொண்டிருக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது (1 சாமு. 15:22; ஓசியா 6:6; மீகா 6:8; மத். 5:24; 23:23).

காயீனுடைய சினம் அவரது இதயத்தின் உண்மை பண்பினை வெளிப்படுத்துகிறது. இவ்வசனம் காயீன் மிகுந்த சினம் கொண்டாரென கூறுகிறது, “மிகுந்த” (מְאֹד, *m^e'od*) என்பது அவரது உணர்வுகளின் தீவிரத்தை எடுத்துரைக்கிறது; காயீன் சினத்தால் பற்றியெரிந்தார். ஆதியாகமம் 34:7-ல் யாக்கோபின் புதல்வர்கள் தங்கள் இளைய உடன்பிறப்பு தீனாள் சீகேமியர்களால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதை கேள்வியுற்ற போது கொண்ட சினத்தினை விவரிக்க இதே எபிரெயப் பதம் காணப்படுகிறது. இவ்விதமான சினம் அடக்கப்படாமல் போகுமெனில் இந்த சம்பவங்களில் நிகழ்ந்தது போன்று கொலையில் நிறைவுறும் என்பது நிச்சயமாகும்.

காயீனுடைய கொலையின் தொடர்ச்சியாக **அவரது முக நாடி வேறுபட்டதென** கூறப்பட்டுள்ளது, இதன் உண்மையாக பொருள் யாதெனில் “முகம் தொங்கிப் போனது” அல்லது அவரது முகம் சோகத்தினால் நிறைந்து, தாம் புறக்கணிக்கப்பட்ட தோற்றத்தினை வெளிப்படுத்தினது என்பதாகும் (யோபு 29:24-ஐ காண்க). இந்த சூழலில் அவர் ஆபத்தான மன நிலையிலிருந்தார், அதனை தேவனும் அறிந்திருந்தார்.

தன் உடன்பிறப்பை வெறுத்து அவரை கொன்றபடியினால், புதிய ஏற்பாட்டில் காயீன் “தீயவனாக” (சாத்தானாக) கூறப்பட்டிருக்கிறார். அவருடைய இச்செயலிற்கு காரணம் யாதெனில் அவருடைய “செயல்கள் தீயவையாகவும், அவருடைய உடன்பிறப்பினுடைய செயல் நேர்மையானதாகவும்” காணப்பட்டது (1 யோவான் 3:11-15). கொலை செய்ததே அவருடைய பாவத்தின் தொடக்கமாக இருக்கவில்லை; அவருடைய செயல்கள் தீமை நிறைந்ததாக இருந்தபடியினால் ஆபேலை கொலை செய்தார். தனது இளைய உடன்பிறப்பின் மீது கொண்ட வெறுப்பும் பொறாமையுமே ஆதியாகமம் 4:8ல் நடந்த சம்பவத்தினை முன்னெடுத்துச்சென்றது. எனவே தேவன் ஆபேலின் காணிக்கையினை ஏற்று கொண்டதும், அவர் காயீனின் காணிக்கையினை ஏற்க மறுத்ததும் காயீனின் இதயத்தில் பல நாட்களாக பற்றியெரிந்த நெருப்பே இறுதியில் தீப்பிடித்தது. இதன் முடிவே அவரது உடன்பிறப்பின் கொலையில் நிறைவுற்றது.

**வசனம் 6. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?** என்றார்.

ஆதியாகமம் 3:9-13ல் தேவன் காயீனிடம் வினாவை எழுப்புகையில் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு காட்டினது போன்றே பொறுமையும் அன்பினையும் வெளிப்படுத்தினார். மேலும் கர்த்தருடைய வினாக்கள் தகவல்களை தெரிந்துகொள்ள வினவப்பட்டவைகளல்ல, ஏனெனில் அவர் காயீன் எதற்காக சினமுற்றார்? அவரது முக நாடி ஏன் வேறுப்பட்டது? என்பதனை ஏற்கனவே நன்கறிந்திருந்தார். அவர் காயீனுடைய இதயத்தின் பண்புகளை சோதிக்க விரும்பினார். ஒருவேளை காயீன் குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தால் அது அவரை மனந்திரும்புதலுக்கு நேராக வழி நடத்தியிருக்கக்கூடும். எப்படியாயினும் தன்னுடைய உடன்பிறப்பை கொலை செய்யததும், தேவன் மீது ஆத்திரம் அடைந்ததும் கவனிக்கப்படாவிடில் அது அவரை இன்னும் அதிகமான பாவத்திற்கு நேராக வழிநடத்தும் என்பதனை கர்த்தர் நன்கறிந்திருந்தார். ஆனால் தனது பெற்றோரிடமிருந்தது போன்ற பண்பிலக்கணமே காயீனிடமுமிருந்தது. அவரிடம் பாவ அறிக்கை இல்லை அல்லது எதிர் வருபவற்றை குறித்து மனமாற்றமில்லை; சினமடைந்த காயீன் தேவனின் வினாவிற்கு எந்த ஒரு விடையையும் அளிக்காமல் அமைதியில் மூழ்கினார்.

**வசனம் 7.** இந்த வசனம் பல கடினமான இலக்கண கேள்விகளை எழுப்புகிறுது. கி.மு. 250-ன் தொடக்கத்தில் செப்துவஜிந்த் மொழி பெயர்ப்பிற்கு பின்னர் சிலர் இதனை சரி செய்து மற்றும் மறுபடியும் எழுத முற்பட்டனர்; இவ்வழக்கம் தற்காலம் வரை தொடருகிறது. இப்பிரச்சனையின் நுட்பங்களை விவாதிப்பது இவ்விளக்க வுரையின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதென்றாலும் NASB மொழி பெயர்ப்பு தேவன் கூறின "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ" எனும் சொற்றொடருக்கு இந்நூலின் ஆக்கியோன் கூறின உண்மையான நோக்கத்திற்கு நிகரான பொருளினை தருகிறது என கூறுவதே இதன் நோக்கமாக இருக்கிறது. "மேன்மை" எனும் பதம் 7ஆம் வசனத்தில் காணப்படவில்லை, எனினும், அப்பதம் சரியான பொருளைத் தருகின்றப்படியினால்; அச்சொல் அவ்வசனத்தில் பயன்படுத்தப் படவேண்டும், மேலும் இவ்வசனம் 5 மற்றும் 6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள காயீனின் முகம் மேன்மையிழந்து தொங்கிப்போனது என்பதனை பின்னோக்குகிறபடியினால், **காயீன் நன்மை செய்து நற்பண்பை உடையவராக இருந்தால் அவர் மேன்மையான முகத்தை பெற்றிருப்பார்**, இது நிந்தனையில்லாமலும் வெட்கப்படாமலும் கர்த்தருக்கு முன்பாக நல்மனசாட்சியோடு இணைந்திருப்பதனை குறிக்கிறது.

தேவன் **பாவத்தை** ஒரு நபராக கூறி **வாசற்படியில் படுத்திருக்குமென கூறுகிறார்.** "படுத்து" அல்லது "பதுங்கி" (רָבַץ, *rabats*)[11] இருப்பது என்பது காட்டு விலங்கு தனது இரையினை பிடிப்பதற்கு முன் செய்தலை குறிக்கிறது. பாவம் தன்னை விரும்பி இருப்பினும் காயீன்

அதனை எதிர்த்து இருக்க வேண்டும். அதனை மேற்கொள்ள வேண்டுமென தேவன் எச்சரித்திருந்தார். காயீன் தனது உடன்பிறப்பை கொலை செய்ய வேண்டுமென முன்தீர்மானித்திருக்கவில்லை, ஏனெனில் தன்னுடைய தற்போதைய வழியில் நிலைத்திருப்பதற்கும் விலகியிருப்பதற்கும் அவருக்கு தெரிவும் உரிமையும் இருந்தது. அவர் பாவத்தில் முழுவதும் மரித்துப் போயிருக்கவில்லை அல்லது பாவத்திற்கு முழுமையாய் அடிமைப்பட்டிருக்கவில்லை. அது தன்னால் வந்ததோ அல்லது மரபுவழியாய் வந்ததோ, எப்படியாயினும் சரியானதை தெரிவுச் செய்யும் பொறுப்பு அவருக்கு இருந்தது. கர்த்தருக்கு கீழ்ப்படியாமையைத் தவிர்த்து முழு மனதுடன் கீழ்ப்படிதலைத் தெரிந்திருக்க வேண்டும், தனது உடன்பிறப்பிடமும் தேவனிடமும் தீய பண்புடன் அணுகுதலை தவிர்த்து இருக்க வேண்டும். கர்த்தர் கூறும் "நீ நன்மை செய்தால்" எனும் சொற்றொடர் அவர் நன்மை செய்திருந்தால் பொருளற்றுப் போயிருக்கும். மேலும் தேவன் தொடக்கத்தில் கொடுத்த பாவத்தை எதிர்க்கும் காயீனுடைய பொறுப்பு "நீ அவனை ஆண்டு கொள்வாய்" எனும் வலிவார்ந்த பெயர் உரிச்சொல்லில் கூறப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் அச்சொல் "நீ ... நீ கண்டிப்பாக ஆண்டுக் கொள்ள வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

## காயீன் தனது உடன்பிறப்பான ஆபேலை கொலை செய்தல் (4:8-16)

**8காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள்
வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய
ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்.
9கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே
என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான்
காவலாளியோ என்றான். 10அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன்
சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக்
கூப்பிடுகிறது. 11இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன்
கையிலே வாங்கிக் கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ
சபிக்கப்பட்டிருப்பாய். 12நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன்
பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று
அலைகிறவனாயிருப்பாய் என்றார். 13அப்பொழுது காயீன் கர்த்தரை
நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. 14இன்று
என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது
சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலை
கிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக்
கொன்றுபோடுவானே என்றான். 15அப்பொழுது கர்த்தர் அவனை
நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று**

**சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்று போடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். [16]அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்.**

**வசனம் 8.** தேவனுடைய எச்சரிப்பையும் மீறி காயீன் தனது வெறுப்பை மேலும் பாவத்தை செய்ய முன்னெடுத்துச் சென்றார். காயீனின் சினம் மற்றும் தனது உடன்பிறப்பினுடைய வழிபாடு ஏற்கப்பட்டு, தனது வழிபாடு ஏற்க மறுக்கப்பட்டதின் காரணத்திற்கு தேவன் அளித்த விளக்கத்தினை ஏற்க மறுத்தது ஆகியவை தனது ஆத்திரம் அடங்கும் வரை கொப்பளித்து கொண்டிருந்தது.

**காயீன் தன்** சகோதரனாகிய **ஆபேலோடு பேசினான்** என்று வசனம் 8 தொடங்குகிறது. எபிரெய எழுத்துக்களில் அவர் அவருடன் என்ன பேசினாரென்பதனை குறித்து எந்த அறிகுறியினையும் குறிப்பிடவில்லை. செப்துவஜிந்த் மற்றும் தொடக்ககால மொழிபெயர்ப்பின், அடிப்படையில் NIV மொழிபெயர்ப்பு "வயலுக்குப் போவோம் வா" என கூறப்பட்டுள்ளது; ஆனால் இந்த சொற்றொடர் வெறும் இணைப்புச்சொல்லாகும். காயீன் தந்திரமாக பேசி அழைத்துச் சென்றாரா அல்லது வீட்டில் நிகழ்ந்த வாக்குவாதம் முற்றி அதன் தொடர்ச்சியாக **வயல்வெளியிலும்** வாக்குவாதம் தொடர்ந்ததா என்பது நமக்கு கூறப்படவில்லை. **காயீன் தன் உடன்பிறப்பாகிய ஆபேலின் மேல் விழுந்து கொலை செய்தான்**, என்பது வசனத்தின் மூலம் நமக்கு தெரியவரும் தகவல். "கொலை செய்தான்" என்பதற்கு (הָרַג, *harag*) எனும் எபிரெய பதம் லேவி மற்றும் சிமியோன் சீகேமின் ஆண் மக்களை கொன்றதில் (ஆதி. 34:25, 26) பயன்படுத்தப்பட்டிருப்பது போன்று அல்லது யெசபேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்ற சம்பவத்தில் (1 இராஜா. 18:13) கூறப்பட்டுள்ளது போன்று, வன்முறை மற்றும் திட்டமிடப்பட்ட கொலை என்பதனை குறிக்க பயன்படுத்தப் பட்டுள்ளது.

**வசனம் 9.** மீண்டும் ஒருமுறை **கர்த்தர் காயீனைப் பார்த்து உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?** வினா எழுப்புகிறார். முன்னர் குறிப்பிட்டிருப்பது போன்று இவ்வாறு வினவுவது தகவல்களை தெரிந்துக் கொள்வதற்காக அல்லாமல் பேசுவதற்காக மட்டுமேயாகும்; மூத்த உடன்பிறப்பை தற்சோதனை செய்வதற்கும், அவர் எவ்விதமான மனிதனாக இருக்கிறார் என்பதனை பார்க்கவுமே இவ்வினா கேட்கப்பட்டது அவருடைய இதயத்தில் தேவனுக்கேற்ற துக்கம் மற்றும் மனமாற்றத்திற்கான இடம் சற்றும் இல்லை ஏனெனில் காயீன் பதுங்கும் இழிவான பழிச்சொல்லோடு **நான் அறியேன், நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ?** என பதிலளித்தார். ஆதாம் குற்றச்சாட்டினை ஏவாளின் மேல் சுமத்தினாலும், தயக்கத்துடன் ஒத்துக்

கொண்டார். ஆனால் காயீன் தேவனுடைய வினாவினை விட்டு ஒதுங்க முயற்சித்து, “நான் என் சகோதரனுக்குக் காவாலாளியோ?” என பொய் கூறி தன் குற்றத்தை சேர்த்துக் கொண்டார்.

காயீன் “இல்லை” என்ற பதிலை எதிர்பார்த்து தன் பேச்சினை தொடரும் வண்ணம் வினாவை எழுப்புகிறார். ஆபேல் மேலிருந்த அவரது வெறுப்பினைக் குறித்து வினாயெழுப்புவது அவர் ஆபேல் மேல் எவ்வளவு வெறுப்பினைக் கொண்டிருந்தார் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. நான் அவருக்கு “காவாலாளியோ” (שָׁמַר, *shamar*) என அவர் பயன்படுத்துகிற பதம் தன் உடன்பிறப்பின் மீது கொண்ட பொறுப்பினை புறக்கணிப்பதனை குறிப்பிடுகிறார். “காவல்” எனும் பதம் வேதத்தில் கவனிப்பை எடுத்துக் கொள்ளுதல், பாதுகாத்தல், காப்பாற்றுதல், நீடித்திருக்க செய்தல், ஆட்கொள்ளுதல், ஒழுங்குப்படுத்துதல் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றாற் போல் சொத்துக்களின் மேல், விலங்கினங்களின் மேல் அல்லது மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்துதல் போன்ற கருத்துக்களோடு இணைந்துக் கூறப்பட்டுள்ளது (3:24 விரிவுரையினை காண்க)[12] உறங்காமலும் தூங்காமலும் (சங். 121:4-8) இருக்கிற தேவனே தமது மக்களின் பெருங்காவலராக இருக்கிறார். எனினும் பெற்றோர்கள் இயல்பாகவே தங்களது பிள்ளைகளை ஆபத்திலிருந்து பாதுகாக்கின்றனர். அதனைப் போன்றே மூத்தப் பிள்ளைகள் தங்கள் இளையவர்களை காண்காணித்து பாதுகாக்க பணிக்கப் பட்டிருக்கின்றனர். ஆனால் காயீனிடம் ஆபேலைக் குறித்து எழுதியிருப்பதுப் போன்று இயல்பான அன்பு இல்லை. எனவே தான் அவரது உடன்பிறப்பைக் குறித்து வினாயெழுப்புகைளில் பொய்யுரைத்தார். அவர் ஆபேலைக் குறித்து பொறுப்பற்ற வனாகவும் அலட்சியமாகவும் இருந்தார்.

**வசனம் 10.** தேவன் காயீனுக்கு ஒரு விடையினை கொடுக்காமல், அவருடைய கொடூரமான செயலினை எதிர் கொள்ளும் விதமாக **நீ அவனை என்ன செய்தாய்** என வினாயெழுப்பினார். இது வினாவை போன்றே தோற்றமளித்தாலும், உண்மையில் அது அவரைக் குற்றப்படுத்துவதாகும், ஏனெனில் தேவன் தகவலைத் தெரிந்துகொள்ள கேட்கவில்லை. ஆண்டவர் காயீனிடமிருந்து மற்றுமொரு ஏமாற்றம் நிறைந்த பதிலிற்காக காத்திருக்காமல், **உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது** என கூறி கொலைக்கு சாட்சியிடுவதனைப் போன்று வெளிப்படுத்தி அவருக்கு வியப்பளித்தார். எபிரெய மடலின் ஆக்கியோனும் இதற்கு ஒத்தாற்போன்று “ஆபேல் மரித்தும் இன்னும் [அவருடைய இரத்தம்] பேசுகிறார்” (எபி. 11:4) என குறிப்பிடுகின்றார். தொன்மைக்கால மக்கள் கொலையுற்று மண்ணில் சிந்தப்பட்ட குருதி, அக்கொலையினை செய்தவர் தண்டனைப்பெறும் வண்ணம் பேசுவது போன்றிருப்பதாக நம்பினர்.

இதனை போன்றே ஒரு விளக்கமே யோபு நூலில் தேவனுக்கு[13] எதிராக முறையிடுகையில், தன்னை கொலைபண்ணப்பட்டவராக எண்ணி "பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே; என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக" (யோபு 16:18) என கூறப்பட்டுள்ளது. உண்மையாகவே யோபுவை பாடுபடுத்தினது சாத்தானேயொழிய தேவன் இல்லை, ஆனால் தேவன் அதனை அவருக்கு வெளிப்படுத்தாததனால் அவர் அதனைக் குறித்து அறிவதற்கு வழியற்று இருந்தார். எனினும் தொன்மைக் காலத்தில் குற்றமற்றவர்களின் குருதி அவர்களை கொன்றழித்தவர்களை பழிதீர்க்கும் வரை கூக்குரலிடுமென நம்பினர் என்பதற்கு இது ஒரு ஆதாரமாக இருக்கிறது. எபிரெய மடலின் ஆக்கியோன் "இயேசுவின் குருதி ஆபேலின் குருதியை விட அதிகம் பேசுவதாக" குறிப்பிடுகிறார் (எபி. 12:24). ஆபேலின் குருதி பழிதீர்க்க மட்டுமே கூக்குரலிடுகிறது ஆனால் இயேசுவின் குருதி நேர்மையற்ற அனைவரின் குற்றங்களுக்கும் கழுவாயாக இருக்கிறது. அது பழிதீர்ப்பதற்கு பதிலாக மன்னிப்பளிக்கிறது எனவே இழந்து போனவர்களுக்கு அது மேன்மைமிக்க செய்தியினை அளிக்கிறது.

**வசனம் 11.** அவரது பெற்றோர்களை போன்றே காயீன் தன் குற்றத்திற்கு வருத்தம் தெரிவிக்கவில்லை மற்றும் மன்னிப்பிற்காக மன்றாடவில்லை. எல்லா வினைகளும் ஒரு எதிர் வினையை உண்டாக்கும் என்பதனை காயீன் கற்று தனது உடன்பிறப்பின் வாழ்வை தீமைக்கு நேராக கொண்டு போக கூடாததாயிருந்தது. இதன் வாசகருக்கு பெரும் வியப்பினை ஏற்படுத்தக்கூடிய செய்தி என்னவென்றால் இக்கொலைக்குற்றத்திற்காக தேவன் காயீனை கொல்லவில்லை என்பதாகும். ஆனால் பின்னர் கூறப்படும் வசனங்களில் திட்டமிட்ட கொலையினைச் செய்யும் கொலைக்காரன் கொலைச் செய்யப்பட வேண்டுமென கூறுகிறார் (ஆதி. 9:6; யாத். 21:12-14). எப்படியாயினும் ஆதாம் ஏவாள் மரண தண்டனையின் எச்சரிக்கைக்குப் பின்னர் பாடுகளோடும் வலிகளோடும் வாழ அருளிரக்கத்தினால் அனுமதிக்கப்பட்டனர், அதனைப் போன்றதே காயீனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையும். காயீன் மரண தண்டனைக்கு உரியவராக இருந்தும் தேவனுடைய அருளிரக்கம் அவரை தான் சார்ந்திருந்த **மண்ணில் சாபத்தோடு** வாழ அனுமதித்தது. **இந்த மண்ணே அவர் கையினால் தன் வாயை திறந்து அவனது உடன்பிறப்பின் குருதியினை பெற்றுக் கொண்டது.**

**வசனம் 12.** கொலைக்கு தன் காலிற்கடியில் **மண் இருந்தது**, எனவே இனி அந்த மண் **அவருக்குப் பலனை தராது**. ஏற்கனவே உழுதுண்டது போன்று மீண்டும் அந்த மண்ணின் பலனை அவர் பெற்றனுபவிக்க இயலாது.

மண்ணின் மீதான தண்டனைத் தீர்ப்பு காயீனுடைய

“அனைத்தையும்”; கவனத்தில் கொள்ளப்பட்டு அளிக்கப்பட்டதாகும். அவர் கர்த்தருக்கு நிலத்தின் கனிகளை காணிக்கையாகக் கொண்டு வந்தார் (4:3). தற்போது அவர் அவருக்கு நன்மையானதை அல்லது தான் அனுபவித்ததை வாழ்நாள் முழுமைக்கும் அனுபவிக்க முடியாது, ஏனெனில் அவர் அந்த மண்ணிலிருந்து துரத்தி விடப்பட்டார் (4:14).

காயீன் தனது பாவத்தினிமித்தம், நாடற்றவராகவும் வீடற்றவராகவும் **உலகத்தில் சுற்றித் திரிகிறவராகவும் மற்றும் நாடோடியாகவும் இருப்பான்**. அவரது அனுபவம் இஸ்ரவேலர்கள் தங்கள் விசுவாசமின்மையினாலும், கீழ்ப்படியாமையினாலும், மற்றும் முரட்டாட்டத்தினாலும் பாலை வனத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்ததற்கு முன்னோடியாக அமைந்தது (எண். 14:33, 34; உபா. 2:14, 15). மண்ணிலிருந்து காயீன் விரட்டப்பட்டது தங்கள் தொடர்ச்சியான ஒழுக்கக்கேடினாலும், சிலை வழிபாட்டினாலும் தங்கள் நாட்டிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு சிறைபிடிக்கப்பட்டதற்கு ஒப்புக்கொடுக்கப் பட்ட தேவனுடைய மக்களுக்கு இணையாக இருக்கிறது (லேவி. 18:24-29; 26:31-35; உபா. 28:63-65).

ஒரு விதத்தில் கூறுவதென்றால் காயீன் தனது தெரிவுகளாலேயே நரக தண்டனை விதிக்கப்பட்டார்: அவர் தன் இல்லத்தாருடன் அமைதியாக வாழாத பட்சத்தில், அவர்கள் இல்லாமல் தனிமையில் வாழ்வதே அவருக்கு நலமாக இருக்கும். அவர் சமூகத்திற்கு ஆபத்தானவராக மாறிப்போனார், எனவே அவர் சமூகத்தை விட்டு புறம்பான ஒரு வாழ்வை வாழ வேண்டியிருந்தது. மேலும் காயீன் தன் வாழ்வில் தேவனை விரும்பாததால், தேவன் காயீனை தம்மோடு அல்லது தமது மக்களோடு இணைந்திருப்பதற்கு பலவந்தம் செய்யவில்லை. இந்தக் கருத்து தேவனுடைய அன்பையும் அவரது ஐக்கியத்தையும் புறக் கணித்தோர், அவரது சமூகத்தையும் மற்றும் மீட்கப்பட்டோரையும் விட்டு நிரந்தரமாக விலக்கப்படுவாரென புதிய ஏற்பாட்டில் வளர்ச்சி பெற்றது விளக்கப்பட்டுள்ளது (மத். 8:11, 12; 2 தெச. 1:6-10).

**வசனங்கள் 13, 14.** அப்பொழுது **எனக்கு இட்ட தண்டனை என்றால் சகிக்கமுடியாது**. எனக் கூறினது மூலம் **காயீன் கர்த்தருக்கு** அளித்த பதிலில் தன் உடன்பிறப்பை கொன்றதற்கு எவ்விதமான வருத்தத்தையும் காட்டவில்லை, ஆனால் அதில் சுயபரிதாபமும் தேவன் மீதான ஆத்திரமும் இருந்தது. **பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்**; எனும் தன் பாவத்தின் விளைவால் வந்த தண்டனை தன்னால் தாங்க இயலாததென காயீன் விவரிக்கிறார். ஒருவேளை காயீனின் கூற்று இவ்வாறாக இருந்திருக்க கூடும் “நீர் என் பெற்றோரை ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டிவிட்டீர், ஆனால் எனது நிலையோ அதனை விட மோசமானது நான் குடியேற எந்த இடத்தையும் காணமுடியாது, அல்லாமலும் எனது நிலமானது விளைச்சலை தர என்

தந்தையின் பணிகளில் பாடுகளையும் வருத்தத்தையும் ஏற்கனவே கூட்டிவிட்டீர், ஆனால் தற்போது என்னை வளமான நிலத்திலிருந்து விரட்டி என்னை நிலையற்றவனாகவும் நாடோடியாகவும் மாற்றுகிறீர், மேலும் நான் உமது முகத்திற்கு மறைவா**க** இருக்க வேண்டும். நீர் என்னை காணவும் எனக்காக எவ்வித அக்கறையும் இனி காட்டவும் மாட்டீர், என் தந்தை தாயாருக்கு ஏதேனில் செய்ததுப் போன்று இனி நான் உம்மை அணுகவும் முடியாது." இங்கே காணப்படும் முரண்பாடு என்னவெனில் காயீன் தேவனுடைய சமூகத்தில் சினம் கொண்டார் மற்றும் தான் அழைக்காமலேயே தேவன் தன் வாழ்வில் தலையிடுகிறார் என்பதாகும். தற்போது அவர் தான் இழந்துக் கொண்டிருப்பதனை உணர்ந்தார், ஆனால் அது மிகவும் காலதாமதமானதாகும். அவர் தான் உதவியற்றவனாக உணர்ந்து **என்னை கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்று போடுவானே** என கூறினார்.

தேவனை விட்டு புறம்பே போகுதல் மற்ற மனிதர் எனக்கு தீங்கிழைப்பர் எனும் அச்சத்திற்கு நேராக காயீனை இட்டுச் சென்றது. காயீனுடைய வருத்தம் அந்நாட்களில் உலகில் பல மனிதர்கள் வாழ்ந்திருக்க கூடும் என்பதனை உறுதிப்படுத்துகிறது, காயீன் தனக்கென ஒரு மனைவியை தெரிவு செய்துகொண்டார் என்பதும், பட்டணத்தை கட்டினார் என கூறும் வசனமும் இதற்கு சாட்சியாக இருக்கிறது (4:17). அநேகமாக அவர் "குருதிப் பழி" தீர்ப்பவராக யாராவது செயல்பட்டுக் கொலைகாரனாகிய தன்னை கொல்லக்கூடுமென எண்ணினார். ஆதாம் ஏவாள் தோட்டத்தை விட்டு புறந்தள்ளப்பட்டதிற்கும், காயீன் மற்றும் ஆபேலின் பிறப்பிற்கும் இடையேயான கால இடைவெளியனைக் குறித்து இந்நூலின் ஆக்கியோன் எதனையும் குறிப்பிடவில்லை. மூத்த மகன் இளைய மகனை கொல்வதற்கு முன்னர் எத்தனை ஆண்டுகள் கழிந்ததென்பதையும் இந்நூலின் ஆக்கியோன் குறிப்பிடவில்லை. அது மட்டுமல்லா**மல்** இக்கொலைக்காரன் யாருக்கு அச்சம் கொண்டிருக்க வேண்டும் அல்லது எங்கிருந்து தனக்கு மனைவியைக் கொண்டார் என்பதனை குறித்து எத்தகவலையும் கூறவில்லை. ஆதாம் ஏவாள் அநேக புதல்வர்களையும் புதல்வியரையும் கொண்டிருந்தனர் (4:25; 5:4), ஆனால் இவர்களின் கால அட்டவணை ஏதும் குறிப்பிடப்படவில்லை. காயீனுடைய மனைவி மற்றும் பலம் பொருந்திய குருதி பழி வாங்குபவர் ஆகியோர் அனைவரும் - ஆதாம் ஏவாளின் வழி தோன்றின - இவரின் உறவினர்களாக இருக்கவேண்டும் (3:20; அப். 17:26). ஆனால் இந்த முதல் தம்பதியினர் தங்கள் சொந்த வீடான ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறின பிறகு எத்தனை ஆண்டுகள் கழிந்தன என்பது நமக்கு தெரியாது. இந்நூலின் ஆக்கியோனுடைய நோக்கம் சரியான கால அட்டவணையை கொடுப்பதல்ல, மாறாக பாவத்தில் வீழ்ச்சியுற்ற மனித இனத்தின் ஆன்மிக பின்மாற்றத்தையும், தேவனை விட்டு பின்

செல்லுதலையும், இவைகள் அனைத்தும் எவ்வாறு பெரு வெள்ள அழிவில் நிறைவு பெற்றது என்பதனையும் குறிப்பிடுவதாகும்.

**வசனம் 15.** காயீன் தனக்களிக்கப்பட்ட தண்டனை மிகப் பெரியதென வாதிட்டார், ஆனால் இவ்வசனம் அதற்கு தலைகீழான ஒரு தொகுப்பினை குறிப்பிடுகிறது. **கர்த்தர்** தம் தண்டனையின் சொற்களை அளித்தப் பின்னர் தமது இரக்கத்தினால் வாக்குத்தத்தத்தின் சொற்களையும் மற்றும் தமது இறை பாதுகாப்பின் ஒரு செயலையும் இந்த மனந்திரும்பாத பாவிக்கு அளித்தார். **காயீனைக் கொல்லுகிற எவன்மேலும் ஏழு மடங்கு பழி சுமரும்** என கூறினார். பழைய ஏற்பாட்டில் “பழிவாங்குதல்” (נָקַם, *naqam*) எனும் பதம் கர்த்தர் தமக்கு எதிரானவர்களுக்கு அல்லது தமது உடன்படிக்கையினை[14] வேண்டுமென்றே மீறுகிற தமது மக்களின் மீது அளிக்கும் தகுந்த தண்டையினை குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. “பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்து வரும்.” என்பதே இக்கட்டளையின் மேன்மையான நிலை (உபா. 32:35, 41; காண்க ரோமர் 12:19).

பாவத்திற்கும் நேர்மையற்ற செயலிற்கும் தண்டனை அளிக்காமல் அனுமதித்து விட்டு இதற்கு தேவன் கண் திறக்காமல் இருந்து விட்டால், அவருடைய தூய்மை, நேர்மையெனும் பண்பிலக்கணத்திற்கு உண்மையற்றவராக இருப்பார். தேவன் மனிதர் மீதும், இனங்களின் மீதும் தமது தற்காலிகமான நியாயத்தீர்ப்பினை அளித்தார், அந்தத் தீர்ப்பு கர்த்தருடைய “பழித்தீர்க்கும் நாள்” என அழைக்கப்பட்டது (ஏசாயா 34:8; 61:2; 63:4; காண்க 35:4; 47:3). எப்படியாயினும் தேவன் தம்முடைய மக்களோடு கொண்டிருந்த தனிப்பட்ட உறவின்படி, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி தவறிழைப்போரை பழிதீர்க்க அனு மதிப்பதில்லை, “பழிக்குப்பழி வாங்காமலும் உன் ஜனப்புத்திரர் மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்” (லேவி. 19:18) என கர்த்தர் மோசேயிக்கு கட்டளையிட்டார். காயீனுடைய நிகழ்வும் இதனைப் போன்றே கொலைகாரனுக்கு காட்ட வேண்டிய மனப்பாங்கிற்கு அறிகுறியாக இருக்கிறது.

“குருதி பழித்தீர்த்தல்” கூடாதெனும் கருத்து சில சமயங்களில் பல்வேறு மக்கள் குழுவினருக்கிடையே நடந்தேறியது போன்று, தங்கள் இல்லத்தாருக்கிடையே அல்லது குலமரபுகளுக்கிடையே “குருதி வழி பகை” தொடங்கி விடக் கூடாதெனும் கண்ணோட்டத்தில் கூறப்பட்டதாகும். தீங்கிழைப்போரை தண்டிக்க ஒரு நடுவர் அரசோ அல்லது நீதி வழங்கும் முறையற்ற பழங்குடி மக்களுக்குத் தேவன் நீதி வழங்கும் முறையினை ஏற்படுத்தித் தந்தார். கொலைக் குற்றத்திற்கு,

அவரது நெருங்கிய உறவினர்கள் நீதியின் முன் சாட்சியாக நிறுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் இப்பழக்கம் சிறப்புற செய்து பின்னர் அடைக்கலப் பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டது; இது கவனக்குறைவால் செய்த கொலை மற்றும் தற்செயலாய் நிகழ்ந்த கொலை ஆகியவற்றிற்கு குறைந்த தண்டனை கொடுக்க வேறுபாட்டினை ஏற்படுத்தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டது (எண். 35:9-28).[15]

காயீனை "பழித்தீர்ப்போருக்கு" ஏழு பழி சுமருமென தேவன் கூறுகையில் தண்டனையை பன்மடங்காக்குவதாக தேவன் எண்ணினார், சில சமயங்களில் சிலர் நினைப்பது போன்று, காயீனைக் கொல்வோரும் அவரது இல்லத்தை சார்ந்த ஏழு பேரும் கொல்லப்படுவர் அல்லது தேவன் காயீனிலிருந்து ஏழு தலைமுறை வரை தண்டிப்பார் எனவும் எடுத்துக் கொள்ளலாம். மேலும் இது ஒரு இலக்கிய நடையில் தேவனுடைய முழுமையான தண்டனையினை குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். "7" எனும் எண் வேதத்தில் முக்கியமானதாக கூறப்பட்டுள்ள தூய்மையான எண்ணாக கூறப்பட்டுள்ளது (லேவி. 26:24, 25; சங். 12:6; 79:12; நீதி. 6:31).

தேவன் தமது இரக்கத்தினால் **காயீன் மீது ஒரு அடையாளத்தினைப் போட்டார்.** அது இந்த பகைமை நிறையுலகில் அவரது பாதுகாப்பினை உறுதிப்படுத்தப் போடப்பட்டதேயொழிய அவருக்கு சாபமாக போடப்படவில்லை. உண்மையில் மனிதர் பார்க்கும்போது அவர் தெய்வீகப் பாதுகாப்பில் இருக்கிறாரென அறிந்து **அவரை கொல்ல மாட்டார்கள்.** எனவே இந்த அடையாளம் (אוֹת, *'oth*) காணப்படாது, அது ஒருவேளை பச்சைக்குத்துதல் போன்றதாக அல்லது அவரது முகத்திலோ அல்லது நெற்றியிலோ ஒருவிதமாக குறியாக இருக்கலாம்.

**வசனம் 16**. இச்சம்பவத்தின் முரண்பாடு என்னவெனில் இரண்டு உடன்பிறப்புகளும் தங்கள் தொழுகையின் மூலம் தேவனைக் கிட்டிச்சேர முற்பட்டனர் என்பதாகும். பொறாமையினாலும் பெருஞ்சினத்தினாலும் தன் உடன்பிறப்பை **காயீன்** கொலைச் செய்தார். அதன் பின்னர் அந்த மனமாற்றமடையாத கொலைக் குற்றவாளி **கர்த்தருடைய சமூகத்தை** விட்டு புறப்பட்டுச் சென்றார். இப்படியாக ஆதியாகமத்தின் ஆக்கியோன் காயீன் தேவனை விட்டு புறம்பே போனதையும், அவர் ஏன் **ஏதேனுக்கு கிழக்கே நோத் நாட்டிற்கு சென்று குடியேறினார்** என்றும் விளக்குகிறார். (נוֹד, *Nod*) எனும் பெயருக்கு "சுற்றித் திரிதல்" எனும் பொருளாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலையாக இல்லாமல் நிலையற்ற துயர வாழ்வினை குறிப்பிடுவது போன்று கூறப்பட்டுள்ளது.[16] இது புவியியல் பகுதி "ஏதேனுக்குக் கிழக்கே" (தேவன் மனுக்குலத்துக்குத் தொடக்கத்தில் கொடுத்திருந்த) வழிகாட்டுதலை விட்டு விட்டு "உலகின் மேல் நிலையற்றிருப்பாய்" எனும் ஆண்டவருடைய தண்டனையை பெற்ற இந்த மனிதன் தன் வாழ்நாளை கழித்திருக்க முடியும் (மனிதனுக்கு அளித்த வீடாகும் 4:14).

# இரு வம்சங்கள் (4:17-26)

## காயீனின் குடும்பம் மற்றும் கலாச்சாரத்தின் தோற்றம் (4:17-24)

**17காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான்.**
**18ஏனோக்குக்கு ஈராத் பிறந்தான்; ஈராத் மெகுயவேலைப் பெற்றான்; மெகுயவேல் மெத்தூசவேலைப் பெற்றான்; மெத்தூசவேல் லாமேக்கைப் பெற்றான்.**
**19லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம்பண்ணினான்; ஒருத்திக்கு ஆதாள் என்று பேர், மற்றொருத்திக்குச் சில்லாள் என்று பேர்.**
**20ஆதாள் யாபாலைப் பெற்றாள்; அவன் கூடாரங்களில் வாசம் பண்ணுகிறவர்களுக்கும், மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான்.**
**21அவன் சகோதரனுடைய பேர் யூபால்; அவன் கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்.**
**22சில்லாளும் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் பித்தளை, இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்.**
**23லாமேக்கு தன் மனைவிகளைப் பார்த்து: ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்; லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்குச் செவி கொடுங்கள்; எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலைசெய்தேன்.**
**24காயீனுக்காக ஏழு பழி சுமருமானால், லாமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும் என்றான்.**

**வசனம் 17.** காயீன் தனது உடன்பிறப்பைக் கொன்று தேவனுடைய தண்டனைக்குட்பட்டிருந்தாலும், பலுகிப் பெருகிப் உலகத்தை நிரப்பும் தமது திட்டத்தை அவர் கைவிடவில்லை. காயீன் யாரை மணந்தார், அவரது திருமணம் எப்பொழுது நிகழ்ந்தது என்பதனைப் பற்றி ஆதியாகமம் ஒன்றும் கூறவில்லை. இருப்பினும் 5:4 ல் கூறப்பட்டுள்ள ஆதாமின் புதல்வியருள் ஒருவராக இருந்திருக்க வேண்டும் (3:20; அப். 17:26 காண்க). உலகில் மிக குறைந்த அளவு மக்களே இருந்ததினால் உடன் பிறந்தோரை மணமுடிப்பது அவசியப்பட்டது. பல தலைமுறைகளுக்கு பிற்பாடும் ஆபிரகாம் தனது ஒன்றுவிட்ட உடன்பிறப்பை மணமுடித்துக் கொண்டார் (20:12). எப்படியாயினும் தற்போது உலகத்தில் மனிதர்கள் பெருகிவிட்டபடியால் இனியும் அதனைப் போன்ற மணமுடிப்புகள் அவசியமில்லை, மோசேயின் நியாயப்பிரமாணமும் இவ்வித பழக்கத்தினை கடிந்து கண்டிக்கிறது

(லேவி. 18:9).

மனிதர் பாவம் செய்த பின்னரும் தேவன் அருளின "பலுகிப் பெருகுங்கள்" (1:28) எனும் ஆசீர்வாதமும் கட்டளையும் தொடர்ந்தது. ஆதாம் மற்றும் ஏவாளிற்கு நிகழ்ந்ததுப்போன்று **காயீன் தனது மனைவியுடன் உறவு கொண்டார், அவர் கருத்தரித்து ஏனோக்கைப் பெற்றார்.** ஆனால் முதல் தம்பதியர் (4:1) கூறினது போன்று காயீனும் அவரது மனைவியும் தங்கள் மகனாகிய ஏனோக்குடன் கர்த்தரைத் தொடர்ப்புபடுத்திக் கூறவில்லை. இதனை பின்பற்றி வருகிற குலமரபின்படி இவ்வழிமரபினர் தங்கள் வாழ்வில் தேவனுக்கு இடமற்ற ஒரு வழிமரபை உண்டாக்கினர்.

ஏனோக்கு (ஆனோக் என்றும் உச்சரிக்கப்படுகிறது) ஆதியாகமத்தில் பலமுறை குறிப்பிடப்பட்டிருந்தாலும் ஆதாம் மற்றும் ஏவாள் வழிவந்தவர்களில் காயீனின் புதல்வரும், சேத்தின் புதல்வரும் இப்பெயருடையோரில் மிகவும் முக்கியமானவர்களாவர் (5:18- 24). உண்மையில் ஏனோக்கெனும் பெயரின் சொல்லிக்கணம் ஐயத்திற்கிடமானது, ஆனால் ஆதியாகமத்தில் எழுதியிருக்கிறப்படி இச்சொல் "பயிற்றுவி" அல்லது "அர்ப்பணி" எனும் பொருளுடைய (חָנַךְ, *chanak*) எனும் எபிரெய சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டும். இரண்டாவதாக கூறப்படும் அர்ப்பணிப்பு எனும் பொருள் தான் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் ஏனெனில் காயீன் ஒரு **பட்டணத்தை கட்டி**, தன் புதல்வனை மேன்மைப்படுத்தும் வகையில் அதற்கு **ஏனோக்** என பெயரிட்டார்.[17]

தேவன் காயீனை நாடோடியாக அலையும்படி தண்டித்தாலும், அவர் "நோத்"ல் குடியேறினார் (நோத் என்பது "அலைந்து திரிகின்ற நாடு" என பொருளாகும்; 4:16) இறுதியில் அவர் தெய்வீகத் திட்டத்திற்கு எதிராக ஒரு பட்டணத்தைக் கட்டினார். இவ்வசனம் கீழ்ப்படியாமையில் தொடர்ந்த வாழ்வினைப் பற்றி குறிப்புகளை தருகிறது.

**வசனம் 18.** இத்தொகுப்பு ஏனோக்கின் நான்கு வழித் தோன்றல்களாகிய **ஈராத், மெகுயவேல், மெத்தூசாலா மற்றும் லாமேக்** ஆகியோரைப் பற்றி படிப்படியான வரிசையில் குறிப்பிடுகிறது. முதல் மூன்று பேர்களின் பெயரைத்தவிர அவர்களைப்பற்றி வேறெந்த தகவலும் குறிப்பிடப் படவில்லை. ஆதாம் மற்றும் காயீன் வழி வந்த தேவன் கூறின பலுகிப் பெருகுங்கள் என்பதை தவிர வேறெந்த குறிப்பிடக்கூடிய முக்கியமான செயல்களை அவர்கள் செய்தில்லாமல் இருந்திருக்கலாம். இதன் ஆக்கியோன் ஆதாமிற்கு ஏழாம் தலைமுறையான, நான்காவது நபரான பிரபலமற்ற லாமேக்கினை நோக்கி நகர்கிறார்.

**வசனம் 19.** லாமேக்கினுடைய வாழ்வின் ஒழுக்கக்கேட்டின் தொடக்கமாக அவர் ஆதாள் மற்றும் சில்லாள் ஆகிய இரண்டு மனைவியரைக் கொண்டாரென கூறப்பட்டுள்ளது. இவரில்

இருந்துதான் ஒருவருக்கு ஒருத்தி எனும் கோட்பாடு தகர்க்கப்பட்டது. இது தேவனுடைய படைப்பின் விருப்பத்தினை விட்டு பின்வாங்கிப் போகுதலாகும். "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (2:24). மீண்டுமொரு முறை தேவனுடைய அருளிரக்கம் முன்னணியில் நின்றது. அவர் லாமேக்கை இதற்காகக் கடிந்து கொள்ளவில்லை, மேலும் பல மனைவிகளை கொண்ட முற்பிதாக்களையும் அவர் கடிந்து கொள்ளவில்லை. இவ்வழக்கம் வழிவிலகிப்போன வாழ்வுமுறையை பின்பற்றின இப்படிப்பட்டவர்களை பல வலிகள் நிறைந்த முடிவிற்குள் நடத்தி சென்றது. எப்படியாயினும் பழைய ஏற்பாடு பல மனைவி களையுடையவர்களின் பேரழிவுமிக்க, பாடுகள் நிறைந்த இல்லற வாழ்வினை படம் பிடித்து காட்டுகிறது. திருமண வாழ்வில் படைத்தவர் ஏற்படுத்தின வழியினை விட்டு படைக்கப்பட்டவைகள் விலக விருப்பங்கொள்ள நினைக்கும் போது என்ன நடக்கும் என்பதை மனிதன் கடினமான வழியில் கற்று கொள்ள தேவன் அனுமதிக்கிறார்.

**வசனங்கள் 20-22. ஆதாளும் சில்லாளும்** இணைந்து நான்கு பிள்ளைகளைப் பெற்றனர். ஆதாள் இரண்டு குமாரர்களைப் பெற்றாள், அதேவேளையில் சில்லாள் ஒரு குமாரனையும், ஒரு குமாரத்தியையும் பெற்றாள். ஒவ்வொரு குமாரர்களுக்கும் பெயர், அத்துடன் அவர்கள் தொழிலும் அவர்கள் தங்கள் நாகரீகத்திற்கான பங்களிப்பும் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சில்லாளின் குமாரத்தியைப் பொறுத்தவரையில் அவள் பெயர் **நாமாள்**, வேறு எதுவும் சொல்லப்படவில்லை, சமுதாயத்தில் அவள் எதுவும் சாதித்ததாக இல்லை.

ஆதாளைக் குறித்து சொல்லும்போது **யாபாலின்** பிறப்பு தான் முதலில் விவரிக்கப்பட்டுள்ளது, **அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும்**, **மிருகங்களின் மந்தையை மேய்க்கிறவர்களுக்கும் அவன் தகப்பன்** என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வாக்கிய அமைப்பில் "தகப்பன்" என்பது நேர் சொல்லாக பயன்படுத்தாமல் உருவக சொல்லாக உள்ளது. நாடோடியாக கூடாரங்களில் தங்குபவர்களுக்கும் மந்தை மேய்ப்பவர்களுக்கும் யாபால் தான் நிறுவனர். முன்பு ஆபேல் "மந்தையை மேய்க்கிறவனாயிருந்தான்" என்ற முந்தைய வசனத்திற்கு எதிரான இந்த வாக்கியமாக இருப்பதாக சிலரால் பார்க்கப்படுகிறது (4:2). இப்படிப்பட்ட தொழிலின் துவக்கமாக யாபாலை எப்படி விவரிக்க முடியும்? உண்மையின் மீது எதிர்ப்பாளர்களின் பார்வையானது ஆபேலின் மந்தையானது (צֹאן, *tso'n*) சிறிய விலங்குகளின் மந்தை அதாவது செம்மறியாடு மற்றும் வெள்ளாடு போன்றவற்றை அந்தப்பதம் வரையறுக்கிறது.[18] யாபாலின் தொழிலை விவரிக்கும் அந்த வார்த்தையானது (מִקְנֶה, *miqneh*) அதாவது "புல்லுகளைத் தின்னும் எல்லா

விலங்குகளையும் குறிக்கிறது," ஆடு, காளை, கழுதை, ஒட்டகம் போன்றவையாகும் (47:16, 17; யாத். 9:3).[19] ஆகவே இந்த வாக்கியத்தில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

**யூபால்**, ஆதாளின் மற்றொரு குமாரன், **இவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பன்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆதி வாத்தியங்களிலிருந்து வந்தது தான் "சுரமண்டலம்" மற்றும் "புல்லாங்குழல்" (NIV) ஆகும். "சுரமண்டலம்" என்பது நரம்புகளைக் கொண்ட வாத்தியம், அது கைகளினால் மீட்டப்படுகிறது (1 சாமு. 16:23), புல்லாங்குழல் மூங்கிலிலிருந்து வந்தது, அது பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, வழக்கமாக யாழ் உடன் அது இணைத்து காணப்படுகிறது (யோபு 21:12; 30:31).

சில்லாளுக்கு பிறந்த **தூபால் காயீன்** உலோக தொழில் நுட்பத்தின் நிறுவனரானார். **அவர் இரும்பு மற்றும் பித்தளை உலோகங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தவரில் மறக்க முடியாதவராக** குறிப்பிடப்படுகிறார். எப்படியாயினும் மனித வரலாற்றின் தொடக்கமான இக்காலக்கட்டத்தில் இருந்த அறிவியலை விட மேம்பட்ட அறிவியலாக உலோகங்களை "உருக்கி" அன்றாட பயன்பாட்டில் கொண்டு வந்தார். உருக்கி என்பதின் சரியான எபிரெய மொழிபெயர்ப்பு (לָטַשׁ, *latash*), "கூர்மையாக்குதல்," "அடித்தல்" அல்லது "சுத்தியல்"[20] என்பதாகும். மேலும் இங்கு பித்தளை என மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் (נְחֹשֶׁת, *n^e^chosheth*) ச்சொசெத் எனும் எபிரெய பதத்தின் அடிப்படைப் பொருள் செம்பு அல்லது "தாமிரம்"[21] என்பதாகும். இதில் தான் தூபால் காயீன் பணிப்புரிந்திருக்க வேண்டும். அந்த தாமிரம் தடிமனான உலோகத்தை உருவாக்குவதற்கு நான்காவது அல்லது மூன்றாவது மில்லினியம் கி.மு. யில் கலக்கத் தொடங்கியது.

இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதனை இரும்பு ஆயுதங்களும் பொருள்களும் அளவற்று அல்லது எளிமையாக கிடைத்ததெனும் சிந்தையினை கொண்டிருக்கக்கூடாது. ஏனெனில் இரும்பானது நான்காம் அல்லது மூன்றாமாயிரம் ஆண்டு வரை தகரத்தில் கலந்து ஒரு கடினமான உலோகமாக உருபெறாமல் இருந்தது. மேலும் சுரங்க தொழிலும் மற்றும் இரும்புகளை உருக்குதலும் கி.மு. 1400 அனடோலியாவில் வாழ்ந்த ஏத்தியர்கள் காலம் வரை தொடங்கப்படவில்லை, தொடக்க காலத்தில் கிழக்குப் பகுதியில் பயன்பாட்டிலிருந்த சிறிய அளவிலான இரும்பு விண்கற்களிலிருந்து கிடைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கி.மு மூன்றாமாயிரமாண்டை சேர்ந்த விண்கற்களில் இருந்து வந்த இரும்பினால் செய்த பல விதமான பொருட்கள் எகிப்து மற்றும் மெசபொத்தோமியா ஆகிய நாடுகளில் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அவற்றில் கோள்களிலிருந்து பெறப்பட்ட இரும்பு கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மை எனினும், தொடக்ககால மனிதர்

விண்கற்களிலிருந்து உண்டாக்கின இரும்பை விட இதில் குறைந்த நிக்கல் காணப்படுகிறது. வல்லுநர்கள் இந்த இரும்பு “இயந்திரத் தொழிலில் தங்கத்தினை தூய்மைப்படுத்தும் முறையில் பயன்பட்டதென்று நம்புகின்றனர்.”[22]

யாபால், யூபால் மற்றும் தூபால் காயீன் ஆகியோரின் நாகரீகத்திற்கான பங்கு அளப்பரியதல்ல (தற்போதைய நாகரீகத்தின் அளவின்படி). ஆனாலும் விவிலிய ஆக்கியோன்கள் சில பகுதிகளின் முன்னேற்றங்களுக்கு அவர்களை காரணர்களாக குறிப்பிடுகின்றனர். அவர்கள் அக்காலத்தில் வளர்ச்சியடைந்த கலாச்சார அறிவுகளுக்கும், தொழில்களுக்கும் முன்னோடிகளாக அல்லது முன்னோர்களாக இருக்கின்றனர். இக்கலாச்சார வளர்ச்சிகளோடும், கண்டுபிடிப்புகளோடும் பாவமும் வளர்ச்சியடைந்தது. இக்கலாச்சார வளர்ச்சி மனிதரை தங்களைத் தானே மேம்பட்டவராகவோ, பிற மனிதரை மதிப்புமிக்கவராக நடத்தவோ, அல்லது தங்களின் இதயத்தில் தேவனுக்கான அச்சமிகு அணுகுமுறையையோ உண்டாக்கவில்லை.

காயீனுடைய வழி மரபினரால் உண்டான முன்னேற்றங்கள் அவர்களின் தீமையாகவோ, அவைகளே தீமைகளாகவோ இருக்கவில்லை. உண்மையில் அவைகள் இரக்கம் நிறைந்த படைப்பாளரின் கொடைகளாகவும், உலகில் மனிதருடைய வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் அருளப்பட்டது. எப்படியாயினும் கொடைகள் இடறுகிறதற்கு காரணமாக அமையலாம்: மனிதர் தேவனால் கொடுக்கப்பட்ட திறமைகளில் வெற்றிக்கொள்ளும் போது பெருமையினால் நிறைந்து விடுகின்றனர், தங்கள் வாழ்வில் தங்களுடைய சாதனையால் மாட்சியினை இழந்து, தம் வாழ்விற்கு தேவன் அவ்வளவு அவசியம் இல்லையெனும் நிலைக்கு வந்துவிடுகின்றனர். நாகரீகமே ஒரு மனிதரை மேன்மை மிக்க நபராக மாற்றுவது இல்லை. மேலும் அது நன்னடத்தையில் சரியானவராகவும், ஒருவரையொருவர் அன்புகூருவதற்கும் உதவாது, தேவனுக்கு நன்றியுடையவராகவும், அச்சம் நிறைந்தவராகவும் மாற்றாது, நாகரீகம் பாவத்தோடு இடைபடுவதும் கிடையாது. அதனை சரிப்பார்க்காவிட்டால் பாவம் சமூகத்தினை சிதைப்பதாகவும், இடையூறாகவும் அமைந்துவிடும். இதற்கு லாமேக்கின் பழிவாங்கும் சொற்களும், நடந்த நிகழ்வுகளும் சாட்சியாக இருக்கிறது.

**வசனம் 23. லாமேக்கு இரு மனைவியரை** மணந்துக் கொண்டதன் மூலம் திருமணத்திற்கான தேவனுடைய பூர்வ திட்டத்தை விட்டு விலகி, **ஆதாளையும் சில்லாளையும்** போட்டி மற்றும் அவமானத்திற்குள்ளாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டார். லாமேக் தனது வீரத்தை வலியுறுத்தி, தனக்கு பிரச்சனை உண்டாக்குகிற யாவர் மேலும் தனது அதிகாரத்தை வெளிப்படுத்தினார். தனது மனைவியரை தனக்கு **செவி மடுக்கும்படியாகவும்**, தனது **பேச்சிற்கு கவனம் செலுத்தும்படியாகவும்**

கூறி தனது முரட்டாட்டத்தை வெளிப்படுத்தினார். இவரது சொற்கள் இரு செய்யுள் போல கூறப்பட்டுள்ளது, இது “பட்டயத்தின் பாடலென” கூறப்பட்டுள்ளது. லாமேக்கினுடைய பெருமை ஒருவேளை தனது புதல்வன் ஒரு புதிய உலோக ஆயுதத்தை உருவாக்கினதால் தன்னை யாரும் வெல்ல முடியாது என்பதன் அடிப்படையில் இருந்திருக்கக் கூடும்.

இவர் தனது பாடலில் **எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்** என இகழ்ந்து வீராப்பாக பாடினார். இச்சொற்றொடர், முதலாவது இவர் தன்னை எவரேனும் தாக்கக் கூடுமென நினைத்து ஒரு எச்சரிக்கை விடுக்கிறாரா அல்லது ஏற்கெனவே நிகழ்ந்த ஒரு நிகழ்வை குறிப்பிடுகிறாரா? இந்த மொழிபெயர்ப்பு இரண்டு வினாக்களை எழுப்புகிறது. எபிரெய எழுத்துக்களில் உள்ள (הָרַג, *harag*) ஹாரக் எனும் பதம் “என்னை காயப்படுத்தக்கூடிய எவரையும் நான் கொல்வேன்”[23] என்பது அதனை வாசிப்போருக்கு சரியான பொருளினை அளிக்கும். எப்படியாயினும் அனைத்து ஆங்கில மொழிபெயர்ப்புகளும் NASB மொழிபெயர்ப்புடன் ஒத்துப்போய், முழு வினைச்சொல்லினை (“நான் ஒருவனை கொன்று இருக்கிறேன்” அல்லது “நான் ஒருவனை கொன்றேன்”[24]) என்று எடுத்துரைக்கிறது. இது லாமேக்கு ஒரு கொலைகாரர் மட்டுமல்லாமல் தான் செய்தவற்றினை குறித்து பெருமை பாராட்டுகிற ஒரு இழிவான மனிதர் என எடுத்துரைக்கிறது.

இரண்டாவதாக எழும் வினா, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் ஒருவரை கொன்றதனை குறிப்பிடுகிறதா அல்லது இருவரைக் கொன்றதாக குறிப்பிடுகிறதா? என்பதாகும். NASB மொழிபெயர்ப்பு “ஒரு மனிதர்” மற்றும் “ஒரு இளைஞர்” என இருவரை குறிக்கிறது. எப்படியாயினும், இலக்கிய எழுத்துக்களில் இரண்டு ஒரே மாதிரியான சொற்கள் ஒரே மனிதரை குறிக்க பயன்படுத்தப்படுகிறது. பல மொழிபெயர்ப்புகள் (יֶלֶד, *yeled*) யெலெட் என்பதனை “ஒரு சிறுவன்” என்பதற்கு பதிலாக “ஒரு இளைஞன்”[25] என்றே மொழிபெயர்க்கின்றன. இங்கு திரும்ப திரும்ப “ஒரு மனிதன்” “ஒரு இளைஞன்” என இரு வேறு சொற்களை பயன்படுத்துவதின் நோக்கம் ஒரே மனிதனை குறிப்பிடுவதாகும். இதில் இளைஞன் என குறிப்பிடுவது ஒருவருடைய வாழ்வின் தொடக்கத்திலுள்ள பெலத்தினை காட்டுகிறது.

லாமேக்கினுடைய இழிவான பாடல் இவருடைய மூதாதையராகிய காயீனைக் காட்டிலும் கவனிக்கதக்க விதத்தில் வேறுபட்டிருக்கிறது. அவர் கொலை செய்துவிட்டு அதனை மறைக்க முயற்சித்தார், தனது உடன்பிறப்பினை குறித்து எதனையும் அறியாதவர் போல நடித்தார், ஆனால் தேவன் அவரோடு எதிர்பட்டார் (4:9). இதற்கு நேர் எதிராக தான் செய்தவனை குறித்து இவர் பெருமை கொண்டு, அதனை தனது மனைவியருக்கு அறிவித்து, மற்றவர்கள் தன்னை கோரமான

கடுமையான மனிதன் என அறிந்துகொள்ள வேண்டும் என விரும்பினார்.

**வசனம் 24.** தனது குற்றத்தை அறிவித்த **பின்னர் காயீனுக்காக ஏழு பழி சுமருமெனில் லாமேக்கிற்காக எழுபத்தேழு பழி சுமருனெ** லாமேக்கு கூறினார். மீண்டுமாக இவர் என்ன கூறுகிறார் என்பது தெளிவில்லை. "யாராவது காயீனை கொன்றால் அவனுக்கு ஏழு பழி சுமரும் [4:15], மேலும் என்னை கொல்வோர் எழுபத்தேழு முறை தண்டனை பெறுவர்!" என ஒருவேளை NLT மொழிபெயர்ப்பு இந்த எண்ணத்தை சரியாக புரிந்திருக்கக் கூடும். ஒரு வேளை இது சரியாக இருக்கக் கூடுமாயின், தன் குற்றத்திற்காக தண்டனை தருவோரின் மேல் லாமேக்கு சாபத்தை கூறுகிறார்.

எப்படியாயினும் இங்கே லாமேக்கு தன் உயிரை எடுக்க *முயற்சிப்போர்* மீது *தன்னை தானே* நியாயந்தீர்ப்பவராக (தேவனல்ல) பார்க்கிறார். இங்கே காயீனை கொல்வோருக்கு தேவன் அளித்த தண்டனையைவிட தான் அளிக்கும் தண்டனை மிக கொடூரமானதென கூறுகிறார். இங்கு கூறப்படும் "எழுபத்தேழு" முறை என்பது மிகைப்படுத்தி[26] கூறப்படுவதாகும். ஒரு இளைஞரை கொன்றதினித்தம் அவரை எவரேனும் தண்டிக்க முயற்சித்தால் அவர் அவர்களை அழித்து விடுவார் என பொருள் கொள்ளுதல் சிறந்தது. "ஏழு" என்கின்ற எண் முழுமையையும் நிறைவையும் குறிப்பிடுகிறது, ஒருவேளை இது தேவன் படைத்தது மற்றும் ஓய்வாக இருந்த நாளையும் சேர்த்து அடிப்படையாக கொண்டிருக்கலாம். ஆனால் லாமேக்கு இங்கு பொல்லாங்கு நிறைவோடு கூறுகிறார்.

இங்கு மிகைப்படுத்தப்பட்ட சொற்கள் என்னவெனில் லாமேக்கு ஒரு கொல்லும் இயந்திரமாக மாறிவிடுவார், ஆதியாகமம்: 6:4, 5, 11ல் கூறப்பட்டுள்ளது போன்று, பயங்கரவாதிகளுக்கு முன்னோடியாக மாறிவிடுவார் என்பதாகும். இதன் காரணமாகவோ என்னவோ காயீனுடைய குலமரபு ஏழு தலைமுறையோடு நின்று விடுகிறது, ஆதாமிலிருந்து ஏழு தலைமுறைக்குள் வெறுப்பு மற்றும் கொலை செய்யும் விருப்பம் உட்பட்ட ஒழுக்க மற்றும் ஆன்மீக வீழ்ச்சி முழுமையின் எல்லைக்கு சென்றது லாமேக்கு இதனை இறுதி செய்தார். உலகின் மீது பேரழிவு ஏற்படுத்தி தண்டனை பெற்ற மற்றவர்களைக் குறித்து இங்கு குறிப்பிடுவது அவசியமற்றதாயினும், அவர்களுடைய பாவம் தேவனுடைய தண்டனையாகிய பெருவெள்ளத்திற்கு நேராக கொண்டு சென்றது (அதிகாரங்கள் 6-8).

## சேத்தும் அவனுடைய குடும்பமும் (4:25, 26)

**25பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலை செய்த ஆபேலுக்குப் பதிலாக,**

**தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள். [26]சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.**

**வசனம் 25.** ஆதாமிலிருந்து லாமேக்கு வரை ஏழு தலைமுறையினை குறிப்பிட்ட பின்னர், இத்தொகுப்பு காயீன் தலைமுறையிலிருந்து கீழ் காணும் சேத்தின் தலைமுறைக்கு மாறுகிறது. இதன் ஆக்கியோன் ஒரு மனிதன் தன் மனைவியுடன் உறவு கொண்டு ஒரு மகனை பெற்றெடுத்தாரென மூன்றாவது முறையாக கூறுகிறார் (**ஆதாம்** இருமுறை மற்றும் காயீன் ஒரு முறை) **தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் ஒரு மகனை பெற்றாள்** (4:1, 17, 25). ஏவாள் அவருக்கு **சேத்** என்று பெயரிட்டாள். எபிரெய மொழியில் (שֵׁת, *Sheth*) எனும் பெயருக்கும், **காயீன் கொன்ற மகனுக்கு பதிலாக தேவன் எனக்கு வேறொரு** [שָׁת, *shath*] **மகனை தந்தார்** என்ற ஏவாளின் சொற்றொடருக்கும் இடையே ஒரு சொல் விளையாட்டு நிகழ்கிறது.

இந்த சொற்கள் ஏவாள் காயீனுக்கு முன்னர் கூறின ("நான் பெற்றேன்") தன்னை முன்னிறுத்திக் கொண்ட சொற்களை விட சேத் பிறந்தபோது (தேவன் கொடுத்தார்) தேவனிடம் கவனம் திருப்பின சொற்கள் மாறுபட்டிருக்கிறது. இது ஒருவேளை ஏவாளுடைய வாழ்வில் சற்று ஆன்மிக முதிர்ச்சி ஏற்பட்டிருப்பதனை காட்டுகிறதாக இருக்கலாம். இவரை காயீன் கொன்ற நேர்மையாளராகிய தன் மகன் ஆபேலின் இழப்பிற்கு பதிலாக தேவன் தந்த ஈடென அவர் எண்ணினார். மேலும் அவர் சேத்தினை "மகன்" என குறிப்பிடுகிறார் (זֶרַע, *zera'*), இது "வித்து" என பொருள்படுகிறது. இச்சொற்றொடர் ஒரு நாள் பாம்பினுடைய (3:15) தலையை வித்து நசுக்குமென கூறின உறுதிமொழியினை இச்சொல் நினைவூட்டுகிறது. இந்த தெளிவற்ற உறுதி மொழியினை அவர் எங்ஙனம் விளக்குகிறார் எனும் அறிவு நமக்கில்லை எனினும் (3:15-ன் கருத்துக்களை காண்க) ஆபேலைப் போன்ற ஒரு நேர்மையான வழிமரபு சேத்தின் மூலம் வருமென அவருடைய சொற்றொடர் எடுத்தியம்புகிறது. ஆதியாகமத்தின் இதர பகுதிகளில் கூறப்பட்டுள்ள பல இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிறதாகக் காணப்படுகின்றன.

**வசனம் 26. சேத்தின் முதல் புதல்வராகிய ஏனோசுடைய** பிறப்பின் அறிவிப்பு உறுதி மொழி பண்ணப்பட்ட "வித்தின்" நம்பிக்கை தொடருகிறதென கூறுகிறது. "ஏனோஸ்" (אֱנוֹשׁ, *'Enosh*) என்பது (אָדָם, *'adam*) ஆதாம் என்பதனை போன்றது (1:26, 27; 5:1-5 காண்க). இதன் பொருள் "மனிதன்" என்பதனை பொதுவில் குறிப்பிடுவதாகும் (யோபு 36:25; சங். 8:4) ஆனால் (இங்கு 5:6-11 லும்) ஒரு தனிப்பட்ட மனிதனை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனோசுடைய தாக்கத்தினால் **மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.**

ஆதியாகமத்தில் முற்பிதாக்களின் வழிப்பாட்டு செயல்களை குறிப்பிட பொதுவாக இப்பதம் கூறப்பட்டுள்ளது (12:8; 13:4; 21:33; 26:25). இது வழிபாடு, மன்றாட்டு மற்றும் கர்த்தருக்கு பலியிடுதலை குறிக்கிறது. மேய்ப்பு தொழில், இசை, மற்றும் உலோக தொழில்[27] ஆகியவற்றினை குறிப்பிட்டது போன்று தற்போது இதன் ஆக்கியோன் வழிபாட்டின் தொடக்கத்தினையும் குறிப்பிடுகிறார்.

## நடைமுறைப்படுத்துதல்

### பாவம் ஒதுக்கி வைக்கப்பட்டது (4:1-16)

வாய்வழி சட்டமோ, எழுதப்பட்ட சட்டமோ, அல்லது இதயத்தில் எழுதப்பட்ட சட்டமோ (ரோமர் 2:12-15) எதுவாயினும் தேவனுடைய சட்டத்தை மீறுவது பாவமாகும் (1 யோவான் 3:4). மனிதர் தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்டபடியினால், அவர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்கம் நிறைந்த உள் கட்டப்பட்ட மனச்சாட்சியினை பெற்றுள்ளனர். முற்காலத்தில் எழுத்துக்கள் கண்டு பிடிப்பதற்கு முன்னர் ஆதாம் மற்றும் ஏவாள், காயீன், நோவா மற்றும் பலரோடு பேசினது போன்று தேவன் மனிதனோடு வாய்வழி சட்டங்களோடு தொடர்பு கொண்டார்.

தேவனுடைய கட்டளைகள் தன்னிச்சையாக மனம் போன போக்கிலோ, மக்களின் வாழ்வில் மகிழ்வை தடைச்செய்யும் நோக்கத்தில் கொடுக்கப்பட்டதல்ல. மாறாக தேவன் தமது கட்டளைகளை அளவிற்கடந்த, நிறைவான வாழ்விற்கு வழிகாட்டியாக தந்தார். பாவம் என்பது பொதுமுறையான சட்டங்களை மீறுவதல்ல; பாவிகள் இறுதியில் தெய்வீகக் கட்டளைகளை மீறி தங்களையே அழிக்கின்றனர்.

*தன்னுள்ளேயே ஒதுக்கப்படுதல்.* பாவம் மனித மனநிலையில் அழிவிற்கான பின் விளைவை ஏற்படுத்துகிறது. அது மனிதனுடைய தனித்தன்மையில் ஆழ்ந்த நிலையில் புறக்கணிப்பை விளைவிக்கிறது. பாவி தனது உள்ளார்ந்த நிலையில் போர் போன்ற அனுபவத்தினை கண்டடைகிறான். பவுல் இந்த போராட்டத்தை:

> ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! … (ரோமர் 7:19, 23, 24).

குறைவாகவோ அல்லது அதிகப்படியாகவோ ஒருவர் பாவத்தோடு எப்படி தொடர்பு வைத்துள்ளார் என்பதனை பொறுத்து எல்லா

மனிதருக்குள்ளேயும் இவ்விதமான போராட்டங்கள் நடை பெறுகின்றது. ஒருவர் தன்னுடைய பாவத்தினை மூடி மறைக்க முயற்சித்து, பாவத்திலும், அழிவின் வாழ்வு முறையிலும் தொடர்ந்து, நேர்மையாளரைப் போல் நடிப்பாரெனில், அவர் ஆன்மீக மனக்கோளாறு உடையவராவார். இது தான் காயீனுடைய வாழ்விலும் நேரிட்டதாகக் காண்கிறோம்: கடினமான விவசாய பணிப்புரிந்து, சிலவற்றை தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வந்து, அவர் சமய நிலையிலும் பொறுப்பு நிலையிலும் நற்புதல்வரைப் போன்று பாசாங்கு செய்தார்.

ஆயினும், மறைமுகமாக பதுங்கி அனைத்து விதமான ஆத்திரம், வெறுப்பு, மற்றும் பொறாமையினை தனது உடன்பிறப்பான ஆபேலிற்கு எதிராக வளர்த்துக் கொண்டார். ஒருவேளை அவருடைய பெற்றோரை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே துரத்தி தங்களுடைய வாழ்வை கடினமாக்கினதினித்தம் அவர் தேவன் மீதும் சினம் கொண்டார் என கூறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கிறது, ஆனால் உண்மையில் அவர் தனது காணிக்கை மறுக்கப்பட்டு தனது உடன்பிறப்பின் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதனால் தேவன் மீது சினம் கொண்டார். தனது பாவத்தை தேவனிடம் அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டிருக்கும் பட்சத்தில், அது அவரது ஆன்மாவிற்கு நலத்தை அளித்திருக்கும். ஆனால் காயீன் பழிவாங்குதலில் அனுமதித்து தனது ஆளுமையை அழிந்து போக வைத்தார். அவர் தனது மனஅழுத்தத்தையும், பிளவுபட்ட ஆளுமையின் புறக்கணிப்பையும், மாய்மாலத்தையும் அடக்க இயலாதபோது, தனது உடன்பிறப்பைக் கொன்றார். அவர் தனது தீஞ்செயலை மறைக்க எத்தனித்து தான் செய்த எச்செயலும் தனக்குத் தெரியாதென தேவனிடம் பொய்யுரைத்தார்.

*இல்லத்தோரை விட்டு ஒதுக்கப்படுதல்.* அதிகாரம் 3 முதல் தம்பதியராகிய ஆதாம் ஏவாள் ஆகியோரிடம் பாவத்தினால் ஏற்பட்ட புறக்கணிப்பை சித்தரிக்கிறது. அவர்கள் பாவம் செய்து தேவன் அவர்களை எதிர்கொண்டபோது, அவர்கள் சாக்குப்போக்கு சொல்லத் தொடங்கினர். ஆதாம் தன் மனைவி ஏவாளின் மீது குற்றஞ்சுமத்தினார். ஏவாள் இதற்கு உண்மையிலேயே புண்பட்டிருக்க வேண்டும், அவள் தன்னை மறைக்க முயற்சித்து, பாம்பின் மேல் குற்றஞ்சுமத்தினார். அச்சமயத்தில் ஆதாம் ஏவாளை தனது துணையாக பார்க்காமல், தனக்கு இடைஞ்சலாகவும், தடுமாற்றத்தை உண்டு பண்ணுகிறவர்களாகவும் எண்ணினார். ஒரு வேளை ஆதாம் பரதீசுவை இழப்பதற்கு நீ தான் காரணமென ஏவாளுக்கு நினைவுபடுத்தியிருக்கலாம், இந்த முதல் பாவம் அவர்களுடைய வாழ்வின் உறவில் சிறிதளவு ஊறுவிளைவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்ட நெடு நாளைக்கு பின்னரும் கசப்புணர்வு அவர்களிடம் இருந்திருக்கும்.

பாவம் என்பது பிறப்பினால் வரும் மரபுரிமை போன்றதல்ல (4:6-8 காண்க); எப்படியாயினும் தீய பண்புகளும், தேவனுக்கெதிரான கடுஞ்சினமும் பெற்றோருடைய சொற்கள் மற்றும் செயல்பாடுகளினால் இல்லத்து உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள இயலும். நிச்சயமாக பிள்ளைகளுடைய பாவத்தின் பொறுப்பு இதன் மூலம் குறைவுபடாது. மேலும் தங்களுடைய செயல்கள் பெற்றோரிடமிருந்த (அல்லது தேவனிடமிருந்த) தவறென கூறி தண்டனையிலிருந்து தப்பித்து விட இயலாது. ஆதாம் ஏவாள் காயீனுக்கு கற்றுக் கொடுத்ததென்ன என்பதும் அல்லது காயீன் வளரும் போது அவர்களிடமிருந்து வாழ்வின் எந்த பண்புகளை அல்லது தேவனைப் பிடித்துக் கொண்டார் என்பதனை குறித்து வசனம் குறிப்பேதும் கூறவில்லை.

அதேபோன்று, ஆபேல் பிறந்து எத்தனை ஆண்டுகள் கழிந்து இது நடைபெற்றதென்பது நமக்குத் தெரியாது. 5:3-ல் ஆதாம் 130 வயதினை எட்டினபோது சேத்தை பெற்றார் என கூறியிருக்கிறபடியினால் நிச்சயமாக பல வருடங்கள் கழிந்திருக்க வேண்டும். ஆபேலின் பிறப்பிற்கு பின்னர் ஆதாமும் ஏவாளும் தங்கள் பண்புகளை மாற்றிக்கொண்டனரா? அப்படியிருப்பின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிள்ளைகள் முதற்பிள்ளை அறிந்திருந்ததனை விட ஒரே இல்லத்தில் வேறுபட்ட சூழலை பெற்றனுபவித்திருக்க வேண்டும். எப்படியாயினும் காயீன் ஆபேல் மற்றும் சேத் ஆகியோரை விட மிகவும் வேறுப்பட்டவராக இருக்கிறார். அவரது வாழ்வு முறை தேவனாலேயோ, அவரது பெற்றோராலேயோ, அல்லது அவரது சூழலின் மூலமாகவோ தீர்மானிக்கப்படவில்லை. தனக்கென தெரிவுகளை மேற்கொள்ளும் திறமை அவருக்கிருந்தது. எனவே அவரது தீர்மானங்களுக்கு அவரே பொறுப்பாளியாக இருக்கிறார்.

அநேகமாக, ஆபேல் தனது பெற்றோரால் மிகவும் தயவு பெற்றவராக இருந்திருக்கக்கூடும், ஏனெனில் அவர் எப்பொழுதும் “நற்புதல்வராக” இருந்தார். இந்நிலையில் தேவன் ஆபேலின் காணிக்கையினை ஏற்றுக் கொண்டு காயீனுடைய காணிக்கையினை புறந்தள்ளினது அவருக்கு தாங்கொண்ணா அவமானத்தை தந்தது. காரணம் எதுவாயினும் காயீன் தனது உடன்பிறப்பின் மேல் வெறுப்பினால் கொப்பளித்தார். தேவன், காயீனுடைய இதயத்தில் ஓடிக் கொண்டிருப்பதனை அறிந்து, பாவம் உன் வாசற்படியில் காட்டு விலங்கினைப் போன்று பதுங்கி இருக்கிறது என எச்சரித்து அதனை ஆண்டு கொள்ளத் தூண்டினார் (4:7). எப்படியாயினும் இப்படி காயீனுடன் உரை நிகழ்த்துவது மிகவும் அதிகப்படியானதாகும். அவர் தன் வெறுப்பிற்கும் பழி வாங்குதலுக்கும் விளைச்சலை தந்து, ஆபேலைக் கொன்று மண்ணிலே புதைத்தார். தேவன் காயீனைப் பார்த்து உன் உடன்பிறப்பு எங்கேயென வினவினபோது அவருடைய பதிலானது “நானறியேன். நான் என் உடன்பிறப்பிற்கு காவலாளியா?”

(4:9).

காயீன் தனது வெறுப்பினாலும் பொறாமையினாலும் தனது உடன்பிறப்பைக் கொன்றார். இப்பண்பு தேவன் தமது பிள்ளைகளின் மேல் கொண்டிருந்த விருப்பத்திற்கு எதிரானதாகும். யோவான் இவ்வாறு கூறுகிறார், "மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுகொள்ளுவதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (1 யோவான் 3:11, 12). காயீன் ஆபேலின் இருப்பிடத்தைப் பற்றியும் அவரது நன்மையைக் குறித்தும் எவ்விதமான பொறுப்பையும் மறுத்து விட்டார். அவரது பாவம், அகங்காரம் நிறைந்த இதயம் அவரது செயலினை மனச்சாட்சியை விட்டு பிரித்து விட்டது, இறுதியில் சோகமான முடிவாக ஏதும் அறியாத தனது உடன்பிறப்பின் உயிரை வேண்டுமென்றே எடுத்துக் கொண்டது.

*தன்னுடைய இல்லத்தார் மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்படுதல்.* காயீன் ஆபேலை கொலை செய்ததினால் தனது பெற்றோர் மீது சுமத்தின வலியினை ஒருவர் கற்பனை மட்டுமே செய்து பார்க்க முடியும். அதிகாரம் 3 மனிதனின் மெய் தூய்மையினை விட்டு வீழ்ச்சியடைந்ததைக் குறிப்பிடுகிறதெனில், அதிகாரம் 4 தேவன் இல்லம் எப்படியிருக்க வேண்டுமென எண்ணினரோ அதனை விட்டு வீழ்ச்சியுற்றதனை சித்தரிக்கிறது. கொலையானது இல்லத்தினை விட்டு பிரிக்க முடியாத மிக ஆழமான பிளவினை ஏற்படுத்தி விட்டது. காயீன் மிக கொடூரமாக, உணர்வில்லாமல் கொலையினை செய்து விட்டார்; எனினும் அதற்காக அவர் வருந்தவில்லை, எனவே அவரை வீட்டில் தங்க அனுமதிப்பது மிகவும் ஆபத்தானதாகும். காயீன் கொல்லப்படுவதற்கு தகுதியானவர், ஆனால் தேவனுடைய அருளிரக்கமாக அவரை தப்பியோடவும், நாடோடியாகவும் வாழ அனுமதித்தார். அவர் தனது இல்லத்தாரோடு அமைதியாக வாழாத பட்சத்தில் அவர்களை விட்டு வெளியே செல்லுதல் அவசியமாகும்.

அவர் சித்தபிரமை பிடித்தவராக தன்னை பார்ப்போர் எவரும் என்னை கொன்று போடுவாரோ என தேவனிடம் முறையிட்டார் (4:14). தனது நேர்மையான உடன்பிறப்பை அவர் கொன்று போட்டிருப்பினும், அவரது குற்றத்திற்காக ஆண்டவர் அவரை தண்டிப்பதற்கு அனைத்து உரிமைகளை பெற்றிருந்தாலும், அவரை விட்டு வைத்த தேவனுடைய அருளிரக்கத்திற்கு அவர் நன்றியுடையவராக இல்லை. அவருக்கு தீங்கு நேரா வண்ணம் தேவன் தமது அருளிரக்கத்தினால் அவர் மேல் போட்ட அடையாளத்திற்கு அவர் நன்றியுடையவராக இல்லை, தன்னை பாதுகாத்த தேவனுடைய இரக்கத்தினை அவர் மெச்சிக் கொள்ளும்

உணர்வு அவரிடம் இல்லை. உண்மையில் தேவன் தன்னை இவ்வுலகில் நாடோடியாக வாழ வேண்டுமென கடுமையாக தண்டித்துவிட்டாரென காயீன் குற்றஞ் சாட்டினார். எதுவும் காயீனுடைய இதயத்தை மென்மையாக்கவோ அல்லது மனந்திரும்புதலுக்கு நேராக அசைக்கவோ இயலவில்லை. இவர் தன் வாழ்நாள் முழுவதும் தேவனுக்கு எதிராக வருத்தங்களை வளர்ப்பவராகவும், தவறிழைக்கும் மனிதருக்கு சாட்சியாகவும் இருந்தார்.

இப்படி நியாயந்தீர்க்கும் பண்பினை மரபு சொத்தாக தனது வழிமரபினருக்கு விட்டு சென்றார், இது லாமேக்கு தான் ஒரு இளைஞனை கொன்று பெருமை பட்டுக் கொள்வதில் உறுதியாகிறது (4:23, 24). ஒருவர் தனது பாவத்தை ஏற்றுக் கொண்டு தனது செயலிற்கு பொறுப்பேற்க தவறுகையில், அதன் விளைவு தலைமுறைகளுக்கும் தொடருகிறது.

*தேவனை விட்டு ஒதுக்கப்படுதல்.* ஆதாமும் ஏவாளும் ஏதேன் வனத்தில் பாவம் செய்த பின்னர், ஆன்மிக ஒதுக்கப்படுதல் நிகழ்ந்தது; அவர்கள் தேவனை விட்டுப் பிரிந்து போனார்கள். அவர்கள் அவருடைய சமூகத்திற்கு பயந்து அவரை விட்டு ஒளிந்துக் கொள்ள முயற்சித்தனர். காயீனுக்கும் அவ்வாறே நிகழ்ந்தது: தேவன் அவரோடு குற்றத்தை குறித்தும், அவர் பெறப்போகும் தண்டனை குறித்தும் இடைப்படுகையில், அவர் தேவனுடைய “சமூகத்தை” விட்டு நாடோடியாகவும் உலகத்தில் அலைந்து திரிகிறவராகவும் இருப்பேனென முறையிடுகிறார் (4:14). “அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்” (4:16) என வசனம் கூறுகிறது. (வசனத்தில் உள்ள “முகம்” மற்றும் “சமூகம்” எனும் இரு சொற்களும், [פָּנִים, *panim*] பனிம் எனும் எபிரெய சொற்களாகும்.)

4:14, 16 ஆகிய வசனங்கள் காயீன் ஏதேன் வனத்தை விட்டு உடல் ரீதியாக வெகுதூரம் வெளியேறினதை சுட்டிக்காட்டுகிறது. ஒருவரது உடல் ரீதியான இடைவெளி தேவனுக்கு எதிராக முரண்டு பிடித்ததின் காரணமாக அவருடைய தயவினை இழந்த ஒருவருவரின் ஆன்மிக பிரிவிற்கு அடையாளமாக இருக்கிறது (யோபு 13:24; சங். 13:1; 44:24; 88:14; 132:10). காயீனுடைய பாவத்தின் காரணமாக அவர் தேவனுடைய “முகத்தை” அல்லது “சமூகத்தை” விட்டு புறப்பட வேண்டியதாக இருந்தது.

ஒரு பாவி மனந்திரும்பி, தேவனுடைய இரக்கத்திற்காகவும் மன்னிப்பிற்காகவும் மன்றாடுகையில் அது திரும்ப கிடைக்கப் பெறுகிறது, தேவனின் முகம் அவர் மேல் ஒளிர்கிறது (சங். 80:19 காண்க). வேறு விதத்தில் கூறுவதென்றால், ஓதுக்கப்படுதல் (பிரிவினை) நின்று போய்விடுகிறது, அவர் மீண்டும் தேவனுடைய தயவையும் பேறுகளையும் பெறுகிறார் (எண். 6:24-27; சங். 4:6; 44:3;

80:3, 7, 19; 89:15).

காயீன் அவருடைய கடினமான இதயம் மற்றும் மனந்திரும்பாத பண்பு ஆகியவற்றினாலேயே இந்த ஒதுக்கப்படுதலை அனுபவித்தார். கீழ்ப்படிதலின் மூலம் தம்மிடம் திரும்புகிற எவரையும் ஏற்றுக் கொண்டு மன்னிப்பதற்கு தேவன் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார். பவுல் ஒருகாலத்தில் இயேசுவை வெறுத்து கிறிஸ்தவர்களை கொலை செய்தார் (1 தீமோ. 1:12-16). பெந்தெகொஸ்தே நாளின் போது மனமாற்றம் அடைந்த பல பேர் இயேசுவை சிலுவையில் அறைய (கொலை) வேண்டுமென கூக்குரலிட்டவர்களாவர் (அப்போஸ்தலர் 2:22, 23, 36-41). சில கிறிஸ்தவர்கள் முன்பு புற இனத்தவரைப் போன்று சிலை வழிபாட்டிலும், தீய வழியிலும் வாழ்ந்தவர்கள் (அப்போஸ்தலர் 26:17, 18; எபே. 2:11-16) எப்படியாயினும் இவர்கள் அனைவரும் மனந்திரும்பினர், தேவன் இவர்களை மன்னித்தார். ஒரு வேளை காயீன் தன் வாழ்வின் எஞ்சிய நாட்கள் வரை தேவனுடைய சமூகத்தினை விட்டு புறம்பே கழித்திருப்பாரென்றால், அவருடைய பிடிவாதமான பெருமையினித்தம் தேவனுடைய முகம் அவர் மேல் ஒளிர்ந்திருக்காது. அவரது கடினமான இதயமே தேவனால் கிடைக்க கூடிய மீட்பையும், தேவனுடைய பேறுகளையும் பெறுவதற்கு அவரைத் தடுத்து விட்டது.

## "கர்த்தருடைய நாமம்" (4:26)

ஆதியாகமம் 4:26; 12:8; மற்றும் 26:25ல் மக்கள் "கர்த்தருடைய நாமத்தைத்" தொழுதுகொள்ளத் தொடங்கினாரெனக் கூறப்பட்டுள்ளது.

ஆதியாகமத்தில்க் கூறப்பட்டுள்ள தனி மனிதர்கள் "கர்த்தருடைய நாமத்தை" (יהוה, *YHWH*) அல்லது "யாவே"வைத் தொழுது கொண்டார்கள் என்பது யாத்திராகமம் 6:3ல் காணப்படுகிறதற்கு முரணானது என்று பிழை காண்போர் வலியுறுத்துகின்றனர். "சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" எனும் வசனத்திற்கு முரண்பட்டிருப்பதாக விமர்சகர்கள் கூறுவதுண்டு. இந்த வாதம் தகுதி வாய்ந்தது போன்று தோன்றலாம். எப்படியாயினும் யாத்திராகமத்தில் வல்லமை பொருந்திய மீட்பின் செயலில், தேவன் மோசேக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் தமது தனித்தன்மை வாய்ந்த பண்பினை அவருடைய தனிப்பட்ட பெயரினை புரிந்து கொள்ளுதலின் வழியாய் வெளிப்படுத்தினார். முதலில் தமது பெயரை "நான் இருக்கிறவர்" என கூறும்படி சொன்னார் (எபிரெய வினைச் சொல்லின் முதல் ஒருமை தனி நபர் "இருக்கிறவர்" (הָיָה, *hayah*; யாத். 3:14). தாம் எகிப்திலுள்ள உயிரற்ற கடவுளர்களை போன்றில்லாமல், தம்மை இருக்கிறவராகவே இருக்கிற உயிருள்ள தேவன் என்பதனை இஸ்ரவேலர் அறிய வேண்டுமென தேவன்

விரும்பினார். இரண்டாவதாக "யாவே" என்பது "இருக்கிறவர்" "நான்" எபிரெய வினைச்சொல்லில் காரண வடிவமாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம், இதன் பொருள் யாதெனில் தேவன் மட்டுமே "இருக்கிறவர்" "நான்" மட்டுமல்லாமல் அவரே "செயல்களை நடக்கச் செய்கிறவர்." அவரே தமது மக்களை மீட்பதற்கு வரலாற்றில் செயல்படக் கூடிய தேவன் என்பதனை பத்து வாதைகளினால் எகிப்திய கடவுளர்களை தோற்கடித்து, செங்கடலை பிளந்து இஸ்ரவேல் மக்களை தப்பிக்கச் செய்து, அவர்களை வாக்குப்பண்ணின நாட்டிற்குள் பாதுகாப்பாக கொண்டுவருவார் என்பதனை வெகு விரைவில் வெளிப்படுத்தினார்.

மூதாதையர்களின் தேவன் தம்மை எகிப்திற்கு மீண்டும் கொண்டு வந்த தேவன் என்பதை இஸ்ரவேலருக்கு அறிவிக்கும் நம்பத்தகுந்த ஒரே வழியாக இது மட்டுமே மோசேயுக்கு ஒரே வழியாக இருந்ததாகத் தெரிகிறது. "யாவே" எனும் பெயர் மங்கிப்போயிருக்கின்ற நினைவுகளை தூண்டி எழுப்பி, இஸ்ரவேலருக்கு தேவனுடைய அன்பையும் எகிப்தின் மேல் தமது வல்லமை வெளிப்படுத்த காத்திருக்கும் மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையைத் தருவதாகும்.

மோசேயுக்கு தேவன் கீழ்கண்டவாறு உத்தரவிட்டார், "மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்பிரஸ்தாபம்" (யாத். 3:15). தேவன் மோசேக்கும் இஸ்ரவேலருக்கும் புதிதான ஒரு பெயரை வெளிப்படுத்தவில்லை, அல்லது "யாவே" என்பதின் புதிய எழுத்துக்களாகவோ இல்லது உச்சரிப்பாகவோ இல்லை. அவர் முதன் முறையாக தனது இறைபண்பின் உட்பார்வையையும், அவருடைய பெயர் அறிவிக்கும் செய்தியினையும் வெளிப்படுத்தினார். இவ்விதமாக அவர் முன்பு மூதாதையருக்கு வெளிப்படுத்தினதை விட, தன்னை குறித்து ஒரு மாபெரும் புரிதலை மோசேக்கு அறிந்துக் கொள்ள வாய்ப்பளித்தார்.

### பாவமும் மீட்பும்

காயீனைப் போன்று, ஆதாம் ஏவாளைப் போன்று அனைத்து மக்களும் பாவம் புரிந்தனர் (ரோமர் 3:23, 24); ஆனால் பாவமன்னிப்பும் மீட்பும் இயேசு கிறிஸ்துவில் கிடைக்கிறது. இயேசு "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" (1 யோவான் 3:5). கிறிஸ்துவிற்குள் இருக்க, எண்ணூழி வாழ்வினை பெற விரும்பும் அனைவரும் பாவத்திற்கு கழுவாயாகவும் அல்லது நம்முடைய பாவத்திற்கு பலியாகவும் (1 யோவான் 2:2; 4:10; காண்க ரோமர் 3:25; NIV). வந்த இறைமை

வாய்ந்த இறை மகன் என நம்பிக்கை கொள்ள வேண்டும் (1 யோவான் 5:13) “வேத வாக்கியங்களின்படி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்” (1 கொரிந்தியர் 15:3) நாம் “பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைக்க” கூறப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 2:24). இதற்கு மனமாற்றம் தேவைப்படுகிறது (அப்போஸ்தலர் 2:38; 17:30).

நம்முடைய கடந்த கால பாவத்தினின்று விடுபட ஒரே வழி அவைகளை ஞானஸ்நானத்தில் கழுவுவது ஒன்று தான் (அப்போஸ்தலர் 22:16). எபிரெயர் 9:22 “இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது” கூறுகிறது, இவ்வசனம் இயேசு “அனைத்து கால பாவங்களுக்கும் ஒரே பலியை செலுத்தினாரென” தொடர்ந்து கூறுகிறது (எபிரெயர் 10:12). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்பதால் (ரோமர் 6:3), “நாம் அவருடைய இரத்தத்தினாலே மீட்கப் பட்டிருக்கிறோம்” (எபே. 1:7). கிறிஸ்துவிற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் “பாவத்திற்கு மரித்து மற்றும் கிறஸ்து இயேசுவிற்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்கள்” (ரோமர் 6:11), அவர்கள் “புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்க” வாய்ப்பினைப் பெறுகின்றனர் (ரோமர் 6:4).

---

இறுதிக் குறிப்புகள்

[1]Leonard J. Coppes, “קַיִן,” in *TWOT*, 2:797–98. [2]John E. Hartley, *Genesis*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 2000), 79. [3]“Targum of Onkelos,” in *The Targums*, trans. J. W. Etheridge (New York: KTAV Publishing House, 1968), 42. [4]Walter C. Kaiser, Jr., *Toward an Old Testament Theology* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1978), 37. [5]“Targum of Palestine,” in *The Targums*, 170. [6]Victor P. Hamilton, “הֶבֶל,” in *TWOT*, 1:204–5. [7]“ஆபேல்” எனும் பெயருக்கு கூடுதலான பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளது. சிலர் இது அக்கடியன் சொல்லாகிய “அப்லு” என கூறுகின்றனர், இதன் பொருள் “மகன்” அல்லது “சுதந்திரவாளி” என்பதாகும். வேறு சிலர் இப்பெயர் “யாபால்” என்பதின் வேறு சொல்லாகும், இதன் பொருள் மேய்ப்பன் அல்லது “மந்தை” “காப்பவன்” (4:20 ஐக் காண்க) என்பதாகுமென கூறுகின்றர். ஆனால் ஆபேல் என்பதனை “ஆதாரமற்ற பொருள்” அல்லது “காற்று” என பொருள் கொள்வதே சிறந்தது. (Richard S. Hess, “Abel,” in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman [New York: Doubleday, 1992], 1:10.) [8]பின்பு இப்படிப்பட்ட முக்கிய மனிதர்களின் தொழில் மந்தை மேய்ப்பதாக இருந்தது. யாக்கோபு (30:36), மோசே (யாத். 3:1), மற்றும் தாவீது (1 சாமு. 16:11). [9]காயீன் தன் தந்தை ஆதாமின் பணியை தொடர்ந்தார் (3:17-19). [10]இங்கு குறிப்பிடப்பட்ட சூழல் “பயிர் காணிக்கை” என தெளிவாக கூறப்பட்டு இருக்கையில், லேவியராகமம் 2 (மற்றும் இதர பகுதிகள்) மின்கா (*minchah*) என்பது “இறச்சி காணிக்கை” யென தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (காண்க NKJV; NASB; NRSV; ESV).

[11]இப்பதம் வளர்ப்பு விலங்குகள் அல்லது மக்கள் “படுத்து இருக்கிறதெனும்,” பொருளினை தருகிறது (ஆதி. 29:2; சங். 23:2; ஏசாயா 13:20; 14:30; எசேக்கியா 34:14). எப்படியாயினும், ஆதியாகமம் 4:7 மற்றும் 49:9 ல் மூர்க்கமான விலங்கொன்று பாய்வதற்கு ஆயத்த நிலையில் உள்ளதனை உருவக படுத்தும் விதத்தில் குறிப்பிடுகிறது. (William White, “רָבַץ,” in *TWOT*, 2:830.) [12]John E. Hartley, “שָׁמַר,” in *TWOT*, 2:939–40. [13]தன் மேல் விழுந்த பாடுகளில் சாத்தானுடைய பங்கு என்னவென்பதனைக் குறித்து யோபு

ஒன்றுமறியாதவராக இருந்தார், அவர் தன்னுடைய இந்த இக்கட்டான சூழலிற்கு தேவனே பொறுப்பென குற்றஞ்சுமத்தினார். எடுத்துக்காட்டாக யோபு 16:12, 13 ல் தேவன் தன் மேல் இரக்கமற்று தமது “அம்புகளுக்கு” தன்னை “இலக்காக” வைத்திருக்கிறாரென குற்றஞ்சுமத்தினார்,தனது “பிச்சுபையை திறந்து” அதன் நீரை “தரையில் ஊற்றுவதாகவும்” கூறுகிறார். மேலும் இதர பல குற்றஞ்சுமத்துதல்களும் இந்நூலில் உள்ளது. [14]Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A (Nashville: Broadman & Holman Publishers, 1996), 277. [15]Elmer B. Smick, “נָקַם,” in *TWOT*, 2:598–99. [16]Helmer Ringgren, “נוּד,” in *Theological Dictionary of the Old Testament*, trans. David E. Green, ed. G. Johannes Botterweck, Helmer Ringgren, and Heinz-Josef Fabry (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1998), 9:271. נוּד (*nud*) எனும் வினைச்சொல் “நிலையற்று நாடோடி போன்று அலைந்து திரிதல்” என்பதாகும். [17]Mathews, 285. [18]John E. Hartley, “צֹאן,” in *TWOT*, 2:749. [19]Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 113. [20]Ludwig Koehler and Walter Baumgartner, *The Hebrew and Aramaic Lexicon of the Old Testament*, study ed., trans. and ed. M. E. J. Richardson (Boston: Brill, 2001), 1:528.

[21]Ibid., 1:691. [22]Gerhard F. Hasel, “Iron,” in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:880. [23]“நான் கொலை செய்வேன்” என்பது மாற்றாக சில மொழிபெயர்ப்புகளின் அடிகுறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது (ASV; NIV). “நான் கொன்றேன்” என NEB மற்றும் REB யில் கூறப்பட்டுள்ளது. [24]KJV; NKJV; ASV; RSV; NRSV; NAB; JB; NJB; NIV; NJPSV; TEV; NLT; NCV; CEV; ESV காண்க. [25]KJV; NKJV; ASV; RSV; NRSV; NEB; REB; NIV; TEV; NLT; NCV; CEV; ESV காண்க. (*Yeled*) எலெட் எனும் சொல் பழைய ஏற்பாடெங்கிலும் சிசுக்கள் (21:8), பதின் பருவத்தினர் (21:16) மற்றும் இளைஞர்கள் (1 இராஜா. 12:8) என விரிந்த எல்லைக்குள் பயன்படுத்தப்பட்டுள்ளது. [26]இவ்விதமான தன்னை மையப்படுத்தும் மற்றும் பழிவாங்கும் ஆவி, கிறிஸ்து தமது மக்களிடம் எதிர்பார்க்கும் விருப்பத்திற்கு எதிரானதாகும். மத்தேயு 18:21, 22ல் அவர் பேதுருவிடம் அவருக்கெதிராக பாவம் செய்தோரை ஏழெழுபது முறை அல்லது “எழுபத்தேழுமுறை” மன்னிக்கும்படியாக கூறுகிறார். [27]Wenham, 116.